சித்த ஆயுர்வேத
மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான

# கை நூல்

## HAND BOOK
FOR SIDDHA AYURVEDIC MEDICAL OFFICERS


*தொகுத்து ஆக்கியோன்:*
வைத்தியகலாநிதி
பொன்னம்பலம் இராமநாதன் D. A. M. & S. (Cey)
M.D. (SIDDHA)



*வெளியீடு:*
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்
சித்திரை
19[illegible]4


ரூபா: 50 - 00

சித்த ஆயுர்வேத
மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான

# கை நூல்

# HAND BOOK
## FOR SIDDHA AYURVEDIC MEDICAL OFFICERS


தொகுத்து ஆக்கியோன்
வைத்தியகலாநிதி
பொன்னம்பலம் இராமநாதன் M. D. (SIDDHA)
பிரதம வைத்திய அதிகாரி, சித்த மருத்துவ நிலையம்
யாழ். மாநகரசபை.
அதிதி விரிவுரையாளர் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.



வெளியீடு:
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி
யாழ்ப்பாணம்.
சித்திரை 1994

முதற் பதிப்பு: ஐப்பசி, 1987
வெளியீடு: லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பதிப்பு:- ஏப்பிரல் 1994

பதிப்பு: ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

பதிப்புரிமை: ஆசிரியருக்கே

# சமர்ப்பணம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



சித்தவைத்தியர் ஆறுமுகம் பொன்னம்பலம்
(பரமர்)

அமரத்துவம் அடைந்த எனது தந்தையார்
பிரபல சித்தவைத்தியர்
ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமர்) அவர்கட்கு
இந்நூற் தொகுப்பினைச் சமர்ப்பிப்பதில்
மகிழ்ச்சியடைகிறேன்

# இரண்டாம் பதிப்பின் அணிந்துரை

வைத்தியக் கலாநிதி பொன்னம்பலம் இராமநாதன் M. D. அவர்களால் மீண்டும் சில புதுவிடயங்கள் புகுத்தப்பட்டு மறுபிரசுரமாக அச்சுவாகனமேற்றப்படும் சித்த ஆயுள் வேத மருத்துவர்களுக்கான கையேடு என்ற நூலுக்கு அணிந்துரை வழங்கும் வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்காக ஆனந்தமடைகிறேன்.

இப்பிரசுரமானது எம்மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்து அவர்களுக்கு வைத்தியத் தொழிலினைத் திறம்பட செய்வதற்கு உதவி செய்கின்றது. ஆகவே வைத்தியத் துறையைச் சார்ந்தவர்கள் இக்கையேட்டினை கை விளக்குக்கிணையாக பாவிப்பர் என்பது எனது நம்பிக்கை. இந் நூலினை வெளியிடுவதற்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

வைத்திய கலாநிதி பூ. உரோமகேசுவரன்
B. Sc; Dip Social Service.
D. A. M & S.
மாகாண ஆயுள் வேதப் பணிப்பாளர்
சுகாதார மகளிர் விவகார அமைச்சு
வடக்கு, கிழக்கு மாகாணம்
திருக்கோணமலை.

10-4-1994

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

"சித்த ஆயுள் வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கைநூல்" என்ற இத்தொகுப்பு நூலினை சித்த மருத்துவம் பயிலும் பல மாணவர்களதும், வைத்திய நண்பர்களினதும் வேண்டுகோளுக்கமைய இரண்டாம் பதிப்பாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக்கைநூலின் முதற்பதிப்பு இலங்கா சித்தாயுள்வேத மருத்துவக் கல்லூரியின் முதல் வெளியீடாக 1987ம் ஆண்டிலே வெளியிடப்பட்டது. 1988ம் ஆண்டு நான் பட்டமேற்படிப்பினை மேற்கொண்டு அரசாங்க விடுமுறையிலே இந்தியா சென்று பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் எனது உயர்கல்வியை முடித்துக்கொண்டு 1991ம் ஆண்டு தாய்நாடு திரும்பி மீண்டும் கடமையில்சேர்ந்தேன். அச்சமயத்திலே பல அன்பர்களும், நலன் விரும்பிகளும் சேர்ந்து இக்கைநூலின் தேவைபற்றியும் அதனை மறுபதிப்பாக வெளியிடவேண்டும் எனவும் வற்புறுத்தி வந்தார்கள் அத்தேவையினை நிறைவு செய்யும் பொருட்டே இக்கைநூலானது எமது வெளியீடாக மீண்டும் வெளிவருகின்றது இதற்கு எல்லாம் வல்ல இறைவனின் பெரும் திருவருளே முதற்காரணமாகும் என்பதனையும் நான் உணர்கின்றேன்.

இந்த இரண்டாம் பதிப்பிலே நான் குறிப்பிடக் கூடியளவு திருத்தங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை. 3ம் பகுதியிலே ஆயுர்வேத முறையில் உள்ள சில கஷாயங்கள் "என்னும் பகுதியிலே 13 வது கஷாயமாகச் செங்கண்மாரிக் குடிநீர்" என்பதனை மட்டும் புதிதாகச்சேர்த்துள்ளேன். அடுத்து நூலின் இறுதிப் பகுதியிலே மருந்துகளின் பாவனை அளவுகள் என்பன மிகப் பழைய நூல்களின் பழைய முறைப்படி கூறப்பட்டவற்றை அந்த அளவுகளுக்கேற்ப, தற்கால புதிய அளவு முறைகளின் பெயர்களைப் பொருந்தும்படியாகக் கொடுத்துள்ளேன்.

தற்போதய அமைதியற்ற கஷ்டங்கள் பல நிறைந்த சூழலிலும் சித்த மருத்துவ மாணவர்கள் பலருக்கும் இக் கைநூல் ஒரு வழிகாட்டியாகப் பயன்பட வேண்டும் என்ற காரணத்தினால் மிகக் குறைந்த விலையிலேயே இதனை வெளியிட முன்வந்துள்ளேன். இக் கைநூல்



தொகுப்பின் இரண்டாம் பதிப்பினை மிகவும் நல்ல முறையிலே அச்சிட்டு விரைவிலே வெளியிடுவதற்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய ஸ்ரீ காந்தா அச்சக உரிமையாளர் அவர்கட்கும், அதன் ஊழியர்கட்கும் ஒப்பு நோக்குதலில் உதவி செய்த யாழ் மாநகர சபை சித்த மருத்துவ நிலையத்தில் கடமையாற்றும் எனது மாணவி செல்வி இராமசாமி அவர்கட்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாவடிச் சந்தி,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்,
ஸ்ரீ லங்கா. 1994

வைத்திய கலாநிதி பொ. இராமநாதன்
பிரதம வைத்திய அதிகாரி
யாழ் மாநகர சபை

# மதிப்புரை

## முதற் பதிப்பு

## வைத்தியகலாநிதி அ. வி. இராசரத்தினம்

## D. A. M. (Cey)

கல்லூரி யாழ்ப்பாணம்.
அதிபர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி யாழ்ப்பாணம்.
யாழ்: லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பகுதி
நேர விரிவுரையாளராகிய வைத்தியகலாநிதி பொன்னம்பலம்
இராமநாதன் அவர்களால் தொகுக்கப்பட்ட சித்த ஆயுர்வேத மருத்
துவ உத்தியோகத்தர்களுக்கான கைநூல் என்னும் ஓர் பிரதியைப்
பார்ப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டதையிட்டு நான் மிகவும்
மகிழ்ச்சியடைகின்றேன்.

அவர் தாம் கற்ற வைத்திய சாஸ்திர அறிவைக் கொண்டும்
தாம் செய்யும் வைத்தியத் தொழிலின் அனுபவத்தைக் கொண்டும்
இந்நூலைத் தொகுத்துள்ளார். இந்நூலிற் குறிப்பிட்ட மருந்துவகை
கள், குடிநீர் வகைகள் ஆகியவற்றின் செய்கைகளையும் குணங்களையும்
அளவுகளையும் அனுபானங்களையும் மருத்துவ உபயோகங்களையும் மிக
விளக்கமாகத் தொகுத்துள்ளார். மேலைத்தேச வைத்திய அறிவுள்ள
வர்களும் இந்நூலை வாசித்து இலகுவில் விளங்கிக் கொள்ளும்
பொருட்டு ஆங்கில சொற்பதங்களையும் இடையிடையே கையாண்
டுள்ளார். வடமொழிப் பதங்களுக்கும் தமிழ்க் கருத்துக்களையும்
கொடுத்துள்ளார். ஆகவே எமது நாட்டில் உள்ளூராட்சி மன்றங்க
ளால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில்
மருத்துவத் தொழில் புரியும் வைத்தியர்களுக்கு சிறப்பாக இந்நூல்
பெரிதும் பயன்படும் எனக் கருதுகிறேன். அங்ஙனமின்றி வைத்திய
சாஸ்திரத்தைக் கற்கும் மாணவர்களுக்கும் தொழில் புரியும் வைத்தி
யர்களுக்கும் இந்நூல் பெரிதும் உபயோகமாகும்.

அரசாங்க ஆயுர்வேத மருத்துவக் கூட்டுத்தாபனத்தால் தயா
ரித்தனுப்பும் மருந்துகளின் பெயரே இந்நூலில் பெரிதும் கையாளப்
பட்டிருக்கின்றன. ஆகவே இது மருந்துகளின அட்டவணை (Catalogue)
போன்று மருத்துவர்களுக்குப் பெரிதும பயன்படும் ஓர் நூலாகும்
வைத்திய கலாநிதியவாகள் பல வைத்திய நூல்களையும் ஆராய்ந்து
மிகச் சிரமப்பட்டே இம்மருத்துவக் கைநூலைத் தொகுத்து சிரமம்
பாராது வெளியீட்டுள்ளார் எனத் தோன்றுகின்றது. ஆகவே சித்த
ஆயுர்வேத வைத்தியர்கள் இவருக்கு நன்றி செலுத்த வேண்டிய
கடமைப்பாடு உடையவர்களாவோம். இந்நூல் எங்கள் மருத்துவக்
கல்லூரி வெளியீடாகையினாலும் நாங்கள் பெருமிதமடைகின்றோம்.
இவரின் தொண்டு மேலும் தொடர இறைவன் ஆசிபுரிவாராக!

அ. வி. இராசரத்தினம்
அதிபர்.



## முதற் பதிப்பு 1987

# இக் கைநூல் பற்றிச் சில வார்த்தைகள்.

எமது உள்ளூராட்சிமன்ற சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக
ளில் அரசாங்க ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பப்படும்
ஆயுர்வேத மருந்துகளையே பெரும்பாலும் உபயோகிக்கவேண்டிய
நிர்ப்பந்தம் உள்ளதென்பது சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோ
கத்தர் யாவரும் அறிந்ததே. அரசாங்க ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்
தாபனத்தால் நாவின்னை என்ற இடத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகளாகவே அமைகின்றமையினாலேயே இந்த நிலை
ஏற்பட்டுள்ளதெனலாம். இதனால் சித்த மருத்துவம் பயின்ற மாணவர்
கள் உள்ளூராட்சிமன்ற ஆயுர்வேதவைத்தியசாலைகளில் கடமையாற்றும்
போது ஆயுர்வேத மருந்துகளைக் கையாளுவதில் சில கஷ்டங்கள் ஏற்
படுவதுண்டு; இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்க ஆயுர்வேத
மருந்துக் கூட்டுத்தாபனம் தயாரிக்கும் ஆயுர்வேத மருந்துகளில் முக்
கிமான சில மருந்து வகைகளைச் சித்த மருத்துவத் துறையில் உள்ள
வர்களும் உபயோகிக்கக்கூடிய முறையில் சில விளக்கங்களை எனக்குத்
தெரிந்தளவில் விபரமாக இக் கைநூல் தொகுப்பிலே தருவதற்கு
முயன்றுள்ளேன்.

இங்கு குறிப்பிடப்படும் மருந்து அட்டவணை அரச ஆயுர்வேத
கூட்டுத்தாபனத்தால் 1981ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விலைப்பட்டி
யலின் ஒழுங்கு முறையின்படியே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இங்கு
கூறப்பட்டுள்ள சில மருந்துகளின் செய்கைகள் (Actions) அவர்களு
டைய பிரசுரத்தினின்றும் சேர்த்துக் கொள்ளப்பட்டவை ஆகும். சில
பஸ்பங்களின் செய்கைகள் 'ஸஹரசித்த யோகம்' (இரண்டாம்
பாகம்) என்னும் நூலிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளன. மருந்துகளின்
செய்கைகளைப் பற்றி விளக்கம் கொடுக்கும்போது அனுபவம் மிகுந்த
எனது மதிப்பிற்குரிய யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்
கல்லூரி அதிபர், வைத்தியகலாநிதி அ. வி. இராஜரட்ணம் அவர்க
ளின் ஆலோசனைகளையும் சில விடயங்களில் பெற்றுக் கொண்டேன்.
இது விடயத்தில் அதிபர் அவர்கள் மிகவும உதவியாக இருந்தமைக்கு
நான் என்றும் கடப்பாடுடையேன். குறிப்பாக இக் கைநூலுக்கு
அவர் ஒரு வழிகாட்டியாகவும் விளங்கினார் என்பதை அவசியம் நான்
இவ்விடத்திற் குறிப்பிட விரும்புகின்றேன். தவிர எனது பத்துவருட
ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் அனுபவத்தையும் எனது
தந்தையாராகிய காலஞ்சென்ற பிரபல சித்த வைத்தியர் ஆறுமுகம்
பொன்னம்பலம் அவர்களின் அனுபவ வைத்தியக் குறிப்புகளிலிருந்தும்
இங்கு குறிப்பிடப்படும் மேலதிக விளக்கங்களைச் சேர்த்துள்ளேன்

இதனிற் குறிப்பிடப்பட்ட சில செய்கைகளும் அவற்றிற்கு முக்கியமாக உபயோகிக்கப்படும் மூலிகைகளையும் என்னால் இயன்றளவு ஒழுங்குபடுத்தித் தந்துள்ளேன். இவற்றில் பெரும்பாலானவை கொழும்பு கொட்டா வீதி, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில்நான் கல்வி பயின்ற காலத்தில், எமக்கு அன்புடனும் பண்புடனும் அறிவு புகட்டிய எமது முன்னாள் விரிவுரையாளராக விளங்கிய வைத்திய கலாநிதி ஸ்ரீகாந்தா அருணாசலம் அவர்களால் உருவாக்கி நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட பிரசுரத்தில் இருந்தும் தொகுக்கப்பட்டவை என்பதையும் நன்றியுடன் அறியத் தருகின்றேன்

இவற்றிலே குறிப்பிடப்படும் அனேகமான கஷாயங்கள் கொழும்பு கொட்டா வீதியிலுள்ள மத்திய ஆயுர்வேத ஆரோக்கிய சாலையில் உபயோகிக்கப்பட்டு வருவதும் இவற்றின் முக்கியத்துவத்தையும் சிறப்பினையும் மேலும் விளக்குவதாயுள்ளதெனலாம்.

இத்தொகுப்பிலே அடங்கியுள்ள விஷய அட்டவணைகளை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கூறியுள்ளேன். முதலாம் பகுதி சில செய்கைகளையும் அதற்குரிய ஆங்கிலப் பதங்களையும் சிரமமின்றி விளங்கிக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் தமிழ்ப் பெயர்ப் பதங்கள் என்னால் இயன்றளவு சரியாகத் தரப்பட்டுள்ளன. அத்துடன் மருத்துவர்களால் உபயோகிக்கப்படும் சில குறியீடுகளையும் தந்துள்ளேன். இவற்றினை மேனாட்டு வைத்தியர்கள் மட்டும் உபயோகிக்கின்றார்கள் என்ற கருத்துத் தவறானதாகும். சித்த ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளாக உள்ளவர்களும் இவற்றினைத் தினசரி பழக்கத்திற் கொண்டுவரவேண்டுமென்பதே எனது பெருவிருப்பமாகும்.

இரண்டாம் பகுதியிலே பிரதான மருந்துவகைகள் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளது. இவற்றின் அளவுப் பிரமாணத்தில் ஏதும் மாற்றம் விரும்பினால் மருத்துவர்கள் நமது அனுபவத்திற்கு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் அளவுகளை உபயோகிக்கலாம். ஆனால் நான் இங்கு பொதுவான அளவுப் பிரமாணங்களையே தற்கால முறைப்படி கொடுத்துள்ளேன். இவற்றிலும் அனுபவம் மிகுந்த வைத்தியர்கள் வேறு அனுபானங்களையும் மாற்றி உபயோகிக்கலாம். லேகியங்களின் அளவுகளைக் கூறும்போது 'நெல்லிக்காய்ப் பிரமாணம்' என்பதற்குப் பதிலாக 'இரு தேக்கரண்டி' என்ற அளவு இங்கே என்னால் தரப்பட்டுள்ளது. சில மருந்துகளின் அனுபானங்களைக் கூறும்போது வேண்டிய கஷாயத்தில் கொடுக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளேன்.



இதனை மூன்றாம் பகுதி விளக்கியுள்ளது. இப்பகுதியிலுள்ள கஷாயங்களைக் கவனித்து வேண்டியவற்றைத் தெரிந்தெடுப்பது உங்கள் கடமையாகும். மூன்றாம் பகுதியில் குறிப்பிடப்படும் கஷாயங்கள் ஆயுர்வேத முறையான கஷாயங்கள் என்றும், இவை மிகுந்த பலனை அளிக்கக்கூடியவை என்பதும் எனது அனுபவத்தால் பெற்றுள்ளேன். இறுதியாக மூலிகைகள் தரப்பட்டுள்ளன. மிக முக்கியமெனக் கருதும் மூலிகைகளை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன். சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் அனைவரும் இதனால் பெரும் பயனடைய வேண்டும் என்பதே இக்கைநூல் தொகுப்பின் முழு நோக்கமும் குறிக்கோளுமாகும்.

இக் கைநூலைத் தொகுத்து வெளியிடுவதற்கு எனக்குப் பலரும் உதவி அளித்துள்ளனர். இத்தொகுப்பிற்குப் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கிய யாழ்/லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி அதிபா வைத்தியகலாநிதி அ. வி. இராஜரட்ணம் அவர்கள் முதற்கண் எனது நன்றிக்குரிய முதல்வராவார். அடுத்து இந்நூற் தொகுப்பினை விரைவாக வெளியிடுவதற்கு ஊக்கமளித்த யாழ்/லங்காசித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிப் பதிவாளராக விளங்கும் வைத்திய கலாநிதி (திருமதி) கமலாதேவி பரமசிவம் அவர்கட்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது மாணவியும் தற்போது யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை ஆனைக்கோட்டை உப அலுவலக ஆயுர்வேத வைத்தியசாலையில் தொழில் பயிலுநராக இருக்கும் வைத்திய கலாநிதி செல்வி சிற்றுஜினி துரைராஜா, வைத்தியகலாநிதி செல்வி ஸ்ரீதேவி கணபதிப்பிள்ளை என்பவரும், எனது வைத்தியசாலையில் தொழில் பயிலுநராக விளங்கும் இறுதிவருட மாணவியாகிய செல்வி இந்துமதி என்பவரும், இந்நூற் தொகுப்பினைப் பிரதிபண்ணித் தந்துதவினர். அவர்கட்கும் எனது நன்றிகள்.

இறுதியாக, இக்கைநூலினைப் பிழையறத் தட்டச்சிற் பொறித்துதவிய திருமதி நிர்மலா தனபாலசிங்கம் அவர்கட்கும், இந் நூலை செம்மையுற அழகாக அச்சிட்டு உதவிய சாந்தி அச்சகத்தாருக்கும் அதன் நிர்வாகிக்கும் ஏனைய வழிகளிலும் எனக்கு உதவி ஒத்தாசை புரிந்த மற்றும் எல்லோருக்கும், எனது மனைவி திருமதி கலைவாணி இராமநாதனுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எனக்கு வாழ்வில் பல்லாற்றாலும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் விளங்கும் மதிப்பிற்குரிய அமரத்துவமடைந்த எனது தந்தையாருக்கு இச்சிறுதொகுப்பினைக் காணிக்கையாக்குகின்றேன்.

'கனக தாரா'
தாவடிச் சந்தி,
கொக்குவில், 2-10-1987.

பொன்னம்பலம் இராமநாதன்

# வெளியீட்டுரை

முதற் பதிப்பு 1987
வைத்திய கலாநிதி

திருமதி க. பரமசிவம் D .A. M. S. (Hons) (Cey)
பதிவாளர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்

'சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கைநூல்' என்னும் இந்நூற்றொகுப்பினை எங்கள் நண்பரும் சக விரிவுரையாள ராகவுமுள்ள வைத்திய கலாநிதி பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் எமது ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மூலம் வெளியிட முன்வந்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் அவர்கள் எங்கள் மருத்துவக் கல்லூ ரியில் கடந்த பதின்மூன்று வருடங்களாக விரிவுரையாளராகக் கடமை யாற்றி வருபவர். மூன்றும் வருட இறுதிவருட மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சியையும் அளித்து அம்மாணவர்களைத் திறமையான வைத்தியர்களாகப் பிரகாசிக்கச் செய்யும் பொறுப்பான வேலையையும் செய்து வருகின்றார்.

உள்ளூராட்சிமன்ற ஆயுர்வேத வைத்தியசாலையிற் கடந்த பத்து வருடங்களாக ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தராகக் கடமை யாற்றும் வைத்திய கலாநிதி அவர்கள் ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் தயாரிக்கும் சகல மருந்துகளின் தன்மைகள் பற்றியும் அனுபவவாயிலாக அறிந்துணர்ந்தவர். ஆகவே இக்கைநூலை வெளியிடுவதற்கான முழுத் தகுதியையும். உடையவர் என்பது எனது கருத்தாகும் சித்த மருத்துவத் தில் மேற்படிப்பை மேற்கொள்வதற்காக வெகு விரைவில் தென்னிந் தியா செல்லவுள்ளார்.

சித்த ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் மாணவர்களுக்கும் இக்கை நூல் நற்பயனை அளிக்குமென நான் உறுதியாக நம்புவதுடன், இதே போன்ற பல படைப்புகளை எதிர் காலத்திலும் எமக்குத் தந்து தவுவதுடன், வைத்தியகலாநிதி அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் சகல பணிகளுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி அவர்களது கைநூற்றொகுப்பு எமது கல்லூரி வெளியீடாக மலர்வது எங்கள் கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் மேலும் பெருமை சேர்ப்பதாகவுமுள்ளதெனலாம். எனவே இக்கை நூற்றொகுப்பினை வெளியிட்டு வைப்பதில் நாமும் எங்கள் கல்லூரியும் உவகையடைவதுடன் எங்கள் அனைவரினதும் சார்பில் எமது நன்றி யையும் வைத்திய கலாநிதி அவர்கட்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்

வைத்தியகலாநிதி (திருமதி) க. பரமசிவம்

# விடய அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| இரண்டாம் பதிப்பின் அணிந்துரை | i |
| இரண்டாம் பதிப்பின் முன்னுரை | ii |
| மதிப்புரை-முதற் பதிப்பு | iv |
| முன்னுரை-முதற் பதிப்பு | v |
| வெளியீட்டுரை | viii |
| விஷய அட்டவணை | ix |
| **பகுதி I** | |
| (i) வைத்திய சாத்திரங்களிற் குறிப்பிடப்படும் செய்கைகளும் (Actions) அவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்பதங்களும் | |
| (ii) வைத்தியர்களால் உபயோகிக்கப்படும் சில குறியீடுகள் | 01—02 |
| **பகுதி II** | |
| பிரதான மருந்து வகைகள் சில | 03—25 |
| (i) ஆசவ அரிஷ்டங்கள் | 03—09 |
| (ii) தைலங்கள் | 09—13 |
| (iii) குவாதங்கள் | —13 |
| (iv) குளிகைகள் | 14—15 |
| (v) சூரணங்கள் | 15—19 |
| (vi) பஸ்பங்கள் | 19—20 |
| (vii) கல்கங்களும் லேகியங்களும் | 20—23 |
| (viii) இரசம் சேர்ந்த மருந்துகள் | 23—24 |
| **பகுதி III** | |
| (i) ஆயுர்வேத முறையில் உள்ள சில கஷாயங்கள் | 25—28 |
| (ii) சில குறிப்பிடத்தக்க செய்கைகளுக்குரிய மூலிகைகள் | 28—32 |
| மருத்துவ அளவைகள் | 33—34 |
| விட முறிவுக்கு நம்நாட்டு மருத்துவம் | —35 |
| தொகுப்பிற்கு உதவிய நூல்களிற் சில | |

பகுதி I

## சில செய்கைகளும் அதற்குப் பொருந்தக்கூடிய ஆங்கிலப் பதங்களும்

1. Antacid அம்லநாசினி
வயிற்றில் உள்ள புளிப்பை நீக்கும்.

2. Anthelmintic குடற்புழு நாசினி
குடலில் உள்ள பூச்சிகளை அகற்றும் மருந்து

3. Antidote விஷநாசகாரி
விடத்தை முறிக்கும் மருந்து.

4. Aphrodisiac காமவிருத்தினி, அல்லது இன்பப் பெருக்கி.
காமத்தைப் பெருக்கும் மருந்து.

5. Astringent சங்கோசனகாரி அல்லது துவர்ப்பி
தசை, நரம்பு முதலியவற்றைச் சுருங்கச் செய்யும் மருந்து

6. Carminative உதரவாத ஹரகாரி அல்லது அகட்டு வாய்வு அகற்றி.
வயிற்றில் உஷ்ணத்தை உண்டாக்கி வாயுவைப் போக்குவிக்கும் மருந்து. உணவைச் சீரணிக்கச் செய்யும் மருந்து.

7. Diaphoretic சுவேதகாரி அல்லது வியர்வைப் பெருக்கி.
வியர்வையை உண்டாக்கும் மருந்து.

8. Diuretic சிறுநீர் பெருக்கி.
சிறுநீரை அதிகமாக வெளியேற்றும் மருந்து.

9. Emetic வமனகாரி
வாந்தியை உண்டாக்கும் மருந்து.

10. Expectorant கபஹரகாரி அல்லது கோழையகற்றி.
கபத்தை வெளியாக்கி இருமலைத் தணிக்கும் மருந்து.

11. Ante Pyretic சுரமகற்றி.
சுரத்தை (காய்ச்சல்) நீக்கும் மருந்து.

12. Stimulant உற்சாககாரி.
நாடி நடையையும் சரீர பலத்தையும் அதிகரிக்கும் மருந்து.

13. Analgesic வேதனசாந்தினி
நோயின் வேதனையைத் தணிவிக்கும் மருந்து.

14, Sedative உறக்கமுண்டாக்கி
நித்திரையை உண்டாக்கும் மருந்து.

15. Tranquillizer யோசனை அகற்றி
வீண் மன உளைச்சலை அகற்றி ஆறுதலாக இருக்கச் செய்யும் மருந்து.

வைத்தியர்களால் உபயோகிக்கப்படும் சில குறியீடுகள்

ac — சாப்பாட்டுக்கு முன்
pc — சாப்பாட்டுக்குப் பின்
bd — ஒரு நாளைக்கு இரண்டு நேரம்.
tds — ஒரு நாளைக்கு மூன்று நேரம்.
qds — ஒரு நாளைக்கு நான்கு நேரம்.
(ஆறு மணித்தியாலத்திற்கு ஒரு முறை)
od — ஒவ்வொரு நாளும்
om — ஒவ்வொரு நாள் காலையும்
on — ஒவ்வொரு நாள் இரவும்.
noct — இரவு
stat — உடனடியாக
Rep or Rept — முதல் கொடுத்த மருந்துகளை திருப்பிக் கொடுக்கவும்.
sos — தேவையேற்படின்

பகுதி II

## [I] ஆசவ அரிஷ்டங்கள்

1. அரவிந்தாசவம் Aravindasawa (தாமரை)

பொதுவாக குழந்தைகளுக்குப் உபயோகிக்கப்படும் Tonic ஆகும்: உணவுப் பாதையில் ஏற்படும் அஜீரணம் போன்ற சகல வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். இது பசித்தூண்டியாகவும் தொழிற் படும். பெரியவர்களுக்கு வயிற்றெரிவு, தேககாங்கை போன்றவற்றிற்குப் பித்தசமனமாகவும் உபயோகிக்கலாம்

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு, — 1 அவு. (15 — 30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டுக்கு முன்.

2. சந்தனாசவம் Chandanasawa (சந்தனம்)

இது சிறுநீர் பெருக்கியாகவும். சிறுநீர் பாதையில் ஏற்படும் தொற்றுக் கிருமிகளை அகற்றும் தன்மையையும் கொண்டுள்ளது; (கொனோரியா Gonorrhoea) சிறு நீரில் விந்து வெளிவருதல் (Spermatorrhoea) போன்ற வியாதிகளுக்கு இதனை உபயோகிக்கலாம். இதனில் கிருமி கொல்லித்தன்மை இருப்பதனால் உடம்பில் ஏற்படும் கிருமி சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். அத்துடன் குளிர்ச்சி உண்டாக்கி செய்கையும் இதில் உண்டு. ஆகையால் வயிற்றெரிவு' தேகஎரிவு, குன்மம் போன்ற பித்த சம்பந்தமான வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். பாலர்களின் கிரந்திகளுக்கும் உபயோகிக்கலாம். வாயவியலுக்கும் உபயோகமானது.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15 — 30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.



3. கனகாசவம் Kanakasawa (கரு ஊமத்தை)

சுவாசப்பாதை சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். (Bronchitis) புரோங்கையிரிஸ் (Bronchial Asthma) ஈளை போன்ற வியாதிகளுக்கும் சிறந்தது;

பிரமாணம் — $\frac{1}{4}$ அவு. — $\frac{1}{2}$ அவு. (5 — 15 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

4. லோகாசவம் Louhasawa (அயம்)

சகல பாண்டு, காமாளை, சோகை போன்ற வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். இரத்த உற்பத்திக்கு ஏற்ற மருந்துகளுடன் இதனைச் சேர்த்தும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15 — 30ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்குப் பின்.
(அயம் சேர்ந்த மருந்துகளை வெறுவயிற்றில் உபயோகிப்பதை தவிர்க்கவும்)

5. லோத்திராசவம் Lodhrasawa (லோத்திரம்)

இது பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாடு நோயில் (Menorrhagia போன்றவை) உபயோகிக்கலாம். இது துவர்ப்பியாகத் தொழிற்படுகிறது.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு, — 1 அவு. (15 — 30ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்,

6. பிப்பிலியாசவம் Pippalayasawa (திற்பலி)

உணவுப் பாதையில் ஏற்படும் சகல அஜீரண வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். பசித்தீதூண்டியாகவும் தொழிற்படும். சுவாசம் சம்பந்தப்பட்ட வியாதிகளில் சாதாரண தடிமன், இருமல், தொண்டைக்கரகரப்பு, தொண்டைநோ,

இன்வுளுவன்சா (Influenza) போன்ற வியாதிகளிலும், ஈளை வியாதிக்கும் பீனிசம் (Catarrha) மூலவியாதி போன்றவற்றிற்கும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு: (15 — 30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

7. புனர்னவாசவம் Punarnavasawa (வெள்ளைச்சாறணை)

இது சிறுநீர் பெருக்கியாகத் தொழிற்படும், ஆகையால் உடம்பில் ஏற்படும் வீக்கங்களைக் குறைக்கவல்லது. கை, கால், வீக்கம், ஜலஉதரம் (Ascitis) மண்ணீரல், கல்லீரல் வீக்கம் (Spleen, Liver Enlargement) உணவில் விருப்பமின்மை (Anorexia) போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். இது சிறுநீரக, கல்லீரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் ½ அவு. — 1 அவு. (15—30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

8. சாரிபாதி ஆசவம் Sharibadyasawa (நன்னாரி)

இது சர்ம ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மையுள்ளது. இரத்தத்தில் ஈசினோபில் தொகையை (Oesonophil count) குறைக்கும் தன்மை உள்ளது. பாலர்களுக்கு ஏற்படும் கிரந்தி, ரோகங்களிலும், கிரந்தியால் ஏற்படும் சுவாசாசய வியாதிகட்கும் உபயோகிக்கலாம். இது பித்தசமனமாகவும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15—30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

9. உசிராசவம் Ushirasawa (இலாமிச்சு)

பாண்டு வியாதியில் ஏற்படுகின்ற சோகை, இரத்த பித்தம், குஷ்டம், ஆகியவற்றிற்குப் பாவிக்கலாம். சிறுநீர்ப்பாதை வியாதிகளிலும், கிருமி ரோகங்களிலும் உபயோகிக்கலாம். தேகத்தைக் குளிர்மைப் படுத்தும் தன்மை உள்ளது. சுரகரகாரியாகவும் வேலைசெய்யக் கூடியது.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு (15 — 30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

10. அமுர்தா அரிஷ்டம் Amurtharishta (சீந்தில்)

சகல சுரங்களுக்கும் பாவிக்கலாம், ஆமவாதசுரம், தேக உளைவு, வாதப்பிடிப்புக்கள், தேக எரிவு, தலையிடி போன்ற



வற்றிற்கும் பாவிக்கலாம். நீரிழிவு (மதுமேகம்) நோய்க்கும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15—30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

11. அஸ்வகெந்தா அரிஷ்டம் Aswaganda Arishta (அமுக்கிராய்)

நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு உபயோகிக்கலாம். வாதம், அழல்வாதம் (Neuritis) தேகப்பிடிப்பு, உளைச்சல் (Aching Pains) போன்றவற்றிற்கும் பாவிக்கலாம். நரம்புச் சோர்வால் ஏற்படும் விந்து வெளிவருதல் (Premature Ejaculation) போன்றவற்றையும் தடுக்கும் தன்மை உள்ளது. தேகாரோக்கியத்தையும் குறிப்பாகப் பலப்படுத்த உகந்தது.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15—30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

12. அர்ஜுனு அரிஷ்டம் Arjunarishta (மருது)

இருதயம் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு சிறந்ததாகும் Cardio Tonic ஆக தொழிற்படும் இருதயத்தின் தொழிலைச் சீராக்கவல்லது. (Rhythms) இருதயச் சோர்வு வியாதிக்கு இதனைத் தொடர்ந்து உபயோகிக்கும்போது நாட்சென்ற நிலையில் சுகத்தைக் கொடுக்கக்கூடியது. மதுமேகத்திலும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15 — 30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டுக்கு முன்

13. அபயா அரிஷ்டம் Abayarishta (கடுக்காய்)

மலமிளக்கியாகத் தொழிற்படும். சாதாரணமாக உணவுப் பாதையில் ஏற்படுகின்ற மலக்கட்டு, அஜீரணம் போன்றவற்றிற்கு உபயோகிக்கக்கூடியது. இதனைப் பாலர்களுக்கும் மலமிளக்கியாகக் குறைந்த பிரமாணத்தில் உபயோகிக்கலாம். தேக பலத்திற்கும் உகந்தது. இது மூலரோகத்திலும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15—30 ml)

மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

14. அசோகா அரிஷ்டம் Ashokarishta (அசோகா)

பெரும்பாடு, இரத்த பித்தம், போன்ற வியாதிகட்கும் உபயோகிக்கலாம் ஒழுங்காக மாதவிடாய் வருவதற்கும், அதிக

குருதிப்பெருக்குக்கும் உபயோகிக்கலாம். (Menorrhagia, Metrorrhagia) மாதவிடாய் சம்பந்தப்பட்ட வியாதிகளில் 40 நாள் இதனைத் தொடர்ந்து உபயோகித்தால் இதனுடைய நற்பயனைப் பெறலாம்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

15. பலா அரிஷ்டம் Balarishta (சிற்றுமட்டி)

இது நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகளில் உபயோகிக்கலாம். (Nervous Disorders) பாரிசவாதம், வாதக்குற்றுவலிகள், இரவில்விந்து ஸ்கலிதமகழிதல் ஆகியனவற்றிற்குப் உபயோகிக்கலாம். குறைந்த நரம்பு மண்டலத்தை ஸ்திரப்படுத்தக் கூடியது. இது சுரஹரகாரியாகவும் உறக்கமுண்டாக்கியாகவும் பயன்படுத்தலாம். தொழிற்படும்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

16. திராட்சா அரிஷ்டம் Draksharishta (திராட்சை)

இருமல், தடிமல் போன்ற நிலைமைகளில் உபயோகிக்கலாம். சுவாசப் பாதையில் ஏற்படுகின்ற அரிப்புத் தன்மையை (Irritation) குறைக்கும் தன்மை வாய்ந்தது. மேற் சுவாசப் பாதை தொற்று வியாதிகளிலும் (Upper Respiratory Infection) உபயோகிக்கலாம். மலம் இழக்கியாகவும்தொழிற்படும். பாண்டு வியாதியிலும் இதனைப் உபயோகிக்கலாம்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

17. தந்தி அரிஸ்டம் Danthy Arishta (நேர்வாளம்)

மலக்கட்டை நீக்கக்கூடியது. மூலரோகம் உள்ளவர்கட்கும் இது உபயோகிக்கலாம். வயது சென்றவர்களுக்கு ஏற்படுகின்ற மலக்கட்டிற்கு இது சிறந்ததாகும். உணவுப் பாதையில் ஏற்படுகின்ற அஜீரண நிலைக்கும் உபயோகிக்கலாம், நிலைமைக்கேற்ப பிரமாணத்தைக் கூட்டிக் கொள்ளலாம்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

18. தசமூல அரிஷ்டம் Dashamoolarishta

இது பொதுவாக தேகத்திலுள்ள இதயம், நரம்பு மண்டலங்களையும் ஸ்திரப்படுத்தக் கூடியது (General Tonic) சுவாசாசயம், இருதயம் ஆகியனவற்றில் ஏற்படுகின்ற வியாதிகளில் இதனை உபயோகிக்கலாம். தேக உளைவுகளையும்குறைக்கக்கூடியது.



பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

19. தசமூல அரிஷ்டம் Dashamoolarishta with Musk. (கஸ்தூரி சேர்ந்தது)

மேற்குறிக்கப்பட்ட செய்கைகளைக் கொண்டதுடன் தேகத்தில் வீரியத்தைக் கூட்டும் தன்மையுள்ளது. இதனில் கஸ்தூரியினுடையசெய்கையும் சேர்ந்து காணப்படும். உற்சாக காரியாக பயன் படுத்தலாம்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு (15 — 30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

20. சீரகாதி அரிஷ்டம் (Jeerakadyarishta (நற்சீரகம்)

இது உடம்பிற்கு குளிர்மை ஊட்டுகிறது. வயிற்று எரிவு எரி குன்மம், தேக எரிவு, தேக காங்கை, அழல்வாதம், தலையிடி போன்ற நிலைமைகளில் உபயோகிக்கலாம். பித்த வாய்வு சம்பந்தப்பட்ட வியாதிகளிலும் உபயோகிக்கக் கூடியது. (Nausea Vomiting and Neuritis.) குமட்டல், வாந்தி, அழல்வாதம் போன்றவற்றிற்கும் உகந்தது.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு: (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

21. குடஜா அரிஷ்டம் Gutajarishta (வெட்பாலை)

உணவுப் பாதையில் ஏற்படுகின்ற அஜீரணம் போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். குறிப்பாக வயிற்றுளைவு, (Bacillary Dysentery) வயிற்றோட்டம் போன்ற நிலைமைகளில் உபயோகிக்க உகந்தது. உணவில் ஏற்படுகின்ற நஞ்சுத் தன்மையினால் உண்டாகும் வயிற்றோட்டத்திற்கு (Food Poison) உபயோகிக்கச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

பிரமாணம் — $\frac{1}{2}$ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

22. கதிரா அரிஷ்டம் Kadirarishta (கருங்காலி)

சொறி, சிரங்கு போன்ற சர்ம ரோகங்களில் உபயோகிக்கக் கூடியது. கிருமிகளைக் கொல்லும் தன்மை உள்ளது. (Fungus போன்றவை Eczeema ரோகத்தில் சிறந்த பலனைக்

கொடுக்கும், குடலில் உள்ள புழுக்களையும் கொல்லக்கூடியது?
பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

23. முஸ்தகா அரிஷ்டம் Musthaka Arishta (கோரைக் கிழங்கு)

இது எவ்வகையான சுரத்திற்கும் உபயோகிக்கலாம். உணவுப் பாதையில் ஏற்படும் அஜீரணம், வயிற்றுப் பொருமல், செரியாமை போன்ற நிலைமைகளில் ஏற்படுகின்ற சுரத்திற்கு உபயோகிக்கலாம். Bacillary Dysentery இல் சிறந்த பலனைக் கொடுக்கும்.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15—30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

24. நிம்ப அரிஷ்டம் Nimbarishta (வேம்பு)

பொதுவாக சர்ம ரோகங்களுக்கு உபயோகிக்கக் கூடியது. (Ailergic Conditions) நீக்க குருதியில் உள்ள ஒவ்வாமையை வல்லது. விஷம சுரத்தில் (மலேரியா) சிறந்த பலனைக்கொடுக்கும். குழந்தைகளின் குடலில் உள்ள பூச்சிகளை அகற்றுவதற்கும் உபயோகிக்கலாம். விஷங்களையும் போக்க வல்லது.

பிரமாணம் — ½ அவு. — 1 அவு. (15 — 30 ml)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

25. கற்பூர அரிஷ்டம் Karpoorarishta (விளைவு கற்பூரம்)

உணவுப் பாதையில் ஏற்படும் வேதனைகளை (Colic Pain) குறைக்க வல்லது. வேதனாசாந்தினியாகத் தொழிற்படுவதோடு உறக்கமுண்டாக்கியாகவும் தொழிலாற்றுகின்றது. சீதபேதியில் ஏற்படுகின்ற வயிற்றுக் கடுப்புக்கு சிறந்த பலனைக் கொடுக்கும் (Bacillary Dysentery) வயிற்றோட்டத்தையும் (Diarrhoea) கட்டுப்படுத்த வல்லது. சுவாசாசயத்தில் காணப்படும் வறட்டு இருமலால் (Dry cough) ஏற்படுகின்ற நெஞ்சு நோவிற்கு உட்பிரயோகமாகக் கொடுக்கும் ஔசதங்களில் இதனையும் கலந்து உபயோகித்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

பிரமாணம் — ஒரு அவுன்சுக்கு 10 — 20 துளிகள்)
மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.

(இதனுடைய தயாரிப்பை பொறுத்து பிரமாணம் மாறுபாடடையலாம்)



## பாணி அல்லது மணப்பாகு *Syrup*

1. சித்த ஜீவாமிர்தம் Siddhajeevamrutha

பொதுவாக தேகத்தை பலமாக வைத்திருப்பதற்கு உபயோகிக்கலாம். நரம்பு மண்டலத்தை ஸ்திரப்படுத்தக்கூடியது. இரவில் ஸ்கலிதம் கழிதல் (Nocturnal Emission) மூளையை விருத்தி செய்யக் கூடியது. ஞாபக மறதி, மூளை உளைச்சல் (Mental Fatigue) போன்றவற்றிற்கு சிறந்த பலனைக் கொடுக்கும் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் போன்ற வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். பாலூட்டும் தாய்மாரும் இதனை உபயோகிக்கலாம்.

பிரமாணம் - 1 மேசைக் கரண்டி (10 ml) 2 நேரம் சாப்பாட்டிற்குமுன் பாலுடன் கலந்தும் உபயோகிக்கலாம்.

2. வாசகா சிறப் Syrup Vasaka (ஆடாதோடை)

சுவாச ரோகங்களில் உபயோகிக்கவல்லது. Bronchiectasis Bronchitis Bronchial Asthma (ஈளை) போன்ற ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். சளியை வெளியேற்றுவது மட்டும் அல்லாமல் (Expectorant) சுவாசப்பாதையில் ஏற்படுகின்ற நமைச்சலையும் (Irritation) சாந்தப்படுத்துகின்றது. சிறுகுழந்தைகளுக்கு ஏற்படுகின்ற சளி, இருமல், இழுப்பு போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம்.

பிரமாணம் - 2 - 5 ml மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.
(குழந்தைகளுக்கு அளவைக் குறைக்கலாம்)

3. சாரிபாதி சிறப் Syrup Sariba (நன்னாரி)

சிறுநீர்பாதையில் ஏற்படுகின்ற தொற்று வியாதிகளுக்கு உபயோகிக்கலாம். (Uretheral Infection) சிறுநீர் பெருக்கியாகவும் தொழிற்படும். தேகத்தை குளிர்மைப்படுத்தக்கூடியது. குழந்தைகளில் ஏற்படுகின்ற கிரந்தி வியாதிகளுக்கும் நல்ல பலனைக் கொடுக்கக்கூடியது.

பிரமாணம் - 2 - 5 ml மூன்று நேரம் சாப்பாட்டிற்கு முன்.
(குழந்தைகளுக்கு அளவைக் குறைக்கலாம்)

## (II) தைலங்கள்

1. அஸ்வகெந்த தைலம் Ashwagandha Thaila (அமுக்கிராய்)

வாதரோகங்களுக்கு வெளிப்பிரயோகமாக உபயோகிக்கக் கூடியது. அழல் வாதம், தசைகளில் நோ, கைகால்களில்பிடிப்பு

உளைவு ஆகியவற்றிற்கு உபயோகிக்கலாம். Sciatica போன்ற வாத ரோகங்களில் சிறந்த பலனைக் கொடுக்கும்.

2. பிருங்காமிலத் தைலம் Brungamalaha Thaila

கண்காசம். மாலைக்கண் போன்ற வியாதிகளிலும் கண் எரிவு, தேக அழற்சி, கைகால் எர்வு போன்ற பித்த சம்பந்த மான வியாதிகளிலும் எலும்புச் சூடு. உஷ்ண நோய்கள் ஆகிய னவற்றிலும் உபயோகிக்கக் கூடியது. மூளை சம்பந்தப்பட்ட ஞாபகமறதி: தடுமாற்றம் போன்றவற்றிற்கும் மூளையைப் பலப் படுத்தவும் சிறந்தது. குருதி அமுக்க நோயையும் நாளடைவில் குறைக்கவல்லது.

3. ஹிங்கு திரிகுண தைலம் Hingu Thriguna Thaila (பெருங்காயம்)

காது நோய்களில் உபயோகிக்கக்கூடியது. காதுகுத்து, காத டைப்பு, காது இரைச்சல் போன்ற நிலைமைகளில் 2 அல்லது 3 சொட்டு விட்டு பஞ்சினால் அடைத்துவிடவும். கூடிய அளவில் காதுக்கு விடுவது உகந்தது அல்ல. சிறிது சூடாக்கியும் உபயோ கிக்கலாம். வாயு சம்பந்தப்பட்ட காது ரோகங்களிலும் சிறந்த பலனைக் கொடுக்கும்.

4, இருமேதாதித்தைலம் Irimedadi Thaila

முரசு கரைதல், முரசு வீங்குதல், முரசு கொதித்தல் பல்ல றணை போன்ற நிலைமைகளில் இதனைப் பூசிவிடலாம். முரசில் உள்ள தொற்றுக் கிருமிகளை இது அகற்றவல்லது. முரசு கரைந்து பல் ஆடுவதை நிறுத்தக் கூடியது. முரசைப் பலப்படுத்தக்கூடியது.

5. கரப்பான் தைலம் Karappan Thaila

சர்ம ரோகங்களில் உபயோகிக்கக்கூடியது, தேகத்தில் உண் டாகும் சொறி, சிரங்கு, குட்டம் போன்றவற்றிற்கும் உபயோ கிக்கலாம். Eczyma ரோகத்தில் நீர் வடியாத நிலைமையில் சிறந்த பலனைக் கொடுக்கும். படர்தாமரை ரோகத்திலும், Ring Worm, Scabies ஆகிய வியாதிகளிலும் உபயோகிக்கலாம்.

6, கோல சிலேஷ்மாதி தைலம் Kolaselesma Thaila

தொண்டைத் தாபிதம் (Tonsillitis) Bronchitis வலிப்பு ஆகி யவைகளில் வெளிப் பிரயோகமாகவும் உள்பிரயோகமாகவும் உபயோகிக்கலாம்.



7. லசுநேரண்ட தைலம் Lashunueranda Thaila (உள்ளி ஆமணக்கெண்ணை)

இது அண்ட வாதம் அல்லது விதை வாதரோகங்களில் வெளிப்பிரயோகமாகவும் உட்பிரயோகமாகவும் உபயோகிக்கலாம் கிருமிகள் காரணமாக ஏற்படுகின்ற விதை வீக்கத்திலேயே இது சிறந்த முறையில் பலன் அளிக்கின்றது.

உட்பிரயோகம்: அளவு – ஒரு தேக்கரண்டி (5 ml) வீதம் தினம் இரு வேளைகள்.

8. நாராயண தைலம் Narayana Thaila

வாத ரோகங்களில் உபயோகிக்கக் கூடியது. பாரிசவாதம், மொழி வாதம், முடக்கு வாதம் போன்ற வியாதிகளில் உபயோ கிக்கலாம். இதனைப் உபயோகிக்கும் பொழுது ரோக நிலைக்கு ஏற்ப ஒத்தடங்களைப் பிடிக்கலாம் (Formentation) தைலத்தை சூடு காட்டியும் பூசலாம்.

9. நீலியாதி தைலம் Neelyadi Thaila (அவுரி)

இது தேகத்தை குளிர்மைப்படுத்தக் கூடியது. தலையிடி, கபாலக்குத்து, நித்திரையின்மை போன்றவற்றிற்கு உகந்தது: தலையில் சொடுகு உள்ளவர்களுக்கும் இது சிறந்த பலனைக் கொடுக்கின்றது. விஷநீர்களுக்கும் சிறந்தது.

10. நிர்க்குண்டியாதித் தைலம் Nirgundyadi Thaila (வெண்ணொச்சி)

இது பீனிச ரோகங்களுக்கு உபயோகிக்கக் கூடியது. மூக்கால் நீர்வடிதல், மூக்கு எரிதல், கடுத்தல், கண்ணால் நீர் சொரிதல் போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். Sinusitis வியாதியிலும் உபயோகிக்கலாம். காது ரோகங்கள், நாட்பட்ட விரணம் (Chronic Ulcers) Arthritis, Rhumatic Swelling ஆகியனவற்றி லும் உபயோகிக்கக் கூடியது.

11. பீனிசத் தைலம் Reensa Thaila

பீனிச ரோகங்களில் சிரசிற்கு உபயோகிக்கக்கூடியது. மூக் கால் நீர்வடிதல். தலையிடி, தலைப்பாரம், கண்ணால் நீர்வடிதல் போன்ற நிலைமைகளில் உபயோகிக்கலாம். இதனை மூக்குத் துவாரத்தில் (Nasal Drops) ஒன்று, இரண்டு சொட்டுவிடலாம்.

12. பாட்டா Pata Thaila

பீனிச ரோகங்களில் உபயோகிக்கலாம். மேற் குறிப்பிட்ட பீனிசத் தைலத்திற்குப் பதிலாக இதனையும் உபயோகிக்கலாம். தொடர்ந்து ஏற்படுகின்ற தும்மல், குளிர் காலங்களில் ஏற்படு கின்ற தும்மல் (மந்தார காசம்) ஆகியனவற்றிற்குச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

13. பிண்ட தைலம் Pinda Thaila

வாத ரோகங்களில் உபயோகிக்கக் கூடியது. அத்துடன் சர்ம ரோகங்களுக்கும் உபயோகிக்கலாம் சாதாரணமாக ஏற்படு கின்ற தேமலுக்கு வெளிப் பிரயோகமாக உபயோகிக்கலாம். அடிகாயங்களினால் ஏற்படுகின்ற நோவுகளுக்கும் (Traumatic Pain) உபயோகிக்கலாம்.

14. பீனிச மூர்த்த தைலம் Peenasa Murtha Thaila

பீனிச ரோகங்களுக்கு உபயோகிக்கக் கூடியது. மூக்கால் நீர் வடிதல், தலையிடி போன்றவற்றிற்கு சிரசிற்கும் உபயோகிக்கக் கூடியது. மூக்கால் குருதி வெளியேறுதலுக்கும் உபயோகிக்கலாம்.

15. சீதோதக தைலம் Seethodaka Thaila

கிருமிகளினால் ஏற்படுகின்ற கட்டுகள் (Septic Ulcers) விரணங்கள், எரிகாயங்கள் போன்றவற்றிற்கு வெளிப்பிரயோகமாக உபயோகிக்கலாம். இது பொதுவாக காதைச் சுற்றி ஏற்படு கின்ற கரப்பான் போன்ற விரணங்களில் சிறந்த பலனைக் கொடுக்கும்.

16. சரசபாதி தைலம் Sarshapadl Thaila

தேகத்தில் ஏற்படும் வேதனைகளைச் சாந்தப்படுத்தக் கூடியது. சுவாச ரோகங்களில் ஏற்படுகின்ற நெஞ்சு நோவிற்கு வெளிப்பிர யோகமாக உபயோகிக்கலாம். தசைகளில் ஏற்படுகின்ற வேதனை களையும் உளைவுகளையும் குறைக்க வல்லது. குழந்தைகளுக்கு ஏற்படும் சளிபோன்ற சுவாச ரோகங்களில் இது வெளிப்பிரயோ கமாகப் உபயோகிக்கலாம்.

17. மகா சித்தார்த்த தைலம் Maha Siddhartha Thaila

பக்ஷவாதம் (Hemiplegia) அதே போன்ற வியாதிகள் (Similar Disease) நரம்பு மண்டலம் சார்ந்த வியாதிகளிலும்



உட்பிரயோகமாகவும் வெளிப்பிரயோகமாகவும் மருத்துவ ஆலோசனையின் பேரில் உபயோகிக்கலாம்.

அளவு – 1/8 – ¼ அவு. (4 - 8 ml)

18. திரிபலா தைலம் Thiripala Thaila

மூளை அழற்சி, மண்டைச் சூடு ஆகியவற்றைக் குறைக்க வல்லது. உறக்கத்தை கொடுக்க வல்லது. பொதுவாக உடம்பினை குளிர்ச்சியடையச் செய்கிறது.

## (iii) குவாதம் *Quatha*

1. பத்தியக்ஷா தாத்திரி பூ நிம்பாதி குவாதம் Pathyaksha Dathree Bhunimbadi Quatha

இதனை தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண்பாரமாக இருப்பது போன்ற உணர்ச்சி, கண்குத்து, தலை இறுகிறுப்பு ஆகிய கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகளுக்கு உபயோகிக்கலாம்.

பிரமாணம் – ½ அவு – 1 அவு (15 – 30ml)

சாப்பாட்டிற்கு முன் மூன்று முறை தேன் அல்லது சீனியுடன் கலந்து உபயோகிக்கலாம்.

2. தான்ய பஞ்சக குவாதம் Dhanya Panchaka Quatha

இது வயிற்றோட்டம், வயிற்றுவலி, அஜீரணம், மற்றும் ஆமாசய ரோகங்களில் வேதனா சாந்தினியாகவும் உபயோகிக்கலாம் பசித்தீதூண்டியாகவும் வேலை செய்யும்.

பிரமாணம் – ½ – 1 அவு (15 – 30 ml)

தேனுடன் அல்லது வேறு உகந்த அனுபானத்துடன் உபயோகிக்கலாம்.

3. புனர்னவஸ்ரக குவாதம் Punarwastaka Quataha

இது வீக்கம், ஜலோதரம் (Ascites) பாண்டு போன்ற நிலைமைகளில் உபயோகிக்கலாம். சிறு நீர் பெருக்கியாகவும் உபயோகிக்கலாம்.

பிரமாணம் – ½ அவு — 1 அவு (15 — 30ml)

(தேன் அல்லது தேவைக்கேற்ப அனுபானத்துடன் உபயோகிக்கலாம்)

## (iv) குளிகைகள் *Vatika and Guggulu*

1. சந்திரப் பிரபா வடி Chandrapraba Vatee

இது சிறுநீர்ப் பாதை ரோகங்களுக்கு உபயோகிக்க வல்லது. குறிப்பாக சிறுநீர்க் கற்கள் (Calculi) விதை வீக்கம் (கிருமியால்) ஆகியனவற்றிற்கு உகந்தது. சர்ம ரோகத்திலும் இது உபயோகிக்கலாம்.

அளவு: 1 — 2 குளிகைகள் மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர் அல்லது நோய்க்கேற்ப கஷாயத்திலும் கொடுக்கலாம்.

2. கோக்சுராதி குக்குலு Gokshuradi Guggulu

இது சிறுநீர்ப் பெருக்கியாகவும் சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் தொற்றுக் கிருமிகளை அகற்றுவதாகவும் தொழிற்படுகின்றது. உடம்பு வீக்கத்தையும் குறைக்க வல்லது.

அளவு: 1 — 2 குளிகைகள். மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீரில் அல்லது வேறு அனுபானத்துடன் (வெள்ளைச் சாறணை, நன்னாரி) கொடுக்கலாம்.

3. கிருமி காதினி வடி Krimigathani Vatee

இது குடல் புழுக்களை அகற்ற வல்லது. அத்துடன் குடலில் மேலும் புழுக்கள் ஏற்படாமல் தடுக்க வல்லது.

அளவு: 1 — 2 குளிகைகள். மூன்று நேரம் சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: துவரம்பருப்பு அவித்த நீரில் கொடுக்கலாம். அத்துடன் கிருமிக்கசாயத்துடனும் உபயோகிக்கலாம்.

4. கைசோரக குக்குலு Kaishor Guggulu

இது நாட்பட்ட சர்மரோகங்களில் சிறப்பாக வேலைசெய்யும் அத்துடன் (Gout) வாதரக்தம், கட்டிகள் (Boils) விரணங்கள் (Ulcers) ஆகியனவற்றிற்கும் உபயோகிக்கலாம். இது பசித்தீதூண்டியாகவும் வேதனை சாந்தினியாகவும் வேலைசெய்யும்.

அளவு: 1 — 2 குளிகைகள், மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுமானம்: வெந்நீர் அல்லது வேண்டிய கஷாயம்.



5. சர்ப்ப கெந்த வடி Sarpagandha Vatee

இது அதி குருதி அமுக்க நோயில் உபயோகிக்கக் கூடியது. அதி குருதி அமுக்கத்தினால் ஏற்படும் விகற்பங்களையும் தடுக்கவல்லது இதனை உபயோகிக்கும்போது குருதி அமுக்கத்தை இடைக்கிடை பரீட்சித்துக் கொள்ளுதல் சிறந்தது.

அளவு: 1—2 குளிகைகள் மூன்று வேளை சாப்பாட்டிற்குப்பின்:

அனுபானம்: வெந்நீர் அல்லது வேண்டிய கஷாயம்,

6. சீதாராமவடி Seetharama Vatee

இது எந்த வகையான சுரத்திலும் உபயோகிக்கவல்லது. அத்துடன் வயிற்றோட்டம், வலிப்பு போன்ற நிலைமைகளிலும் வேண்டிய அனுபானத்துடன் உபயோகிக்கலாம்.

அளவு; 2 — 4 குளிகைகள் மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்; மல்லி அவித்த நீர் அல்லது வேறு சுரத்திற்கு உபயோகிக்கும் கஷாயம்.

7. யோக ராஜ குக்குலு Jogaraja Guggulu

இது வாத ரோகங்களில் உபயோகிக்கக்கூடியது. தசைகளில் ஏற்படும் உளைவு, குத்து ஆகியனவற்றிற்கு பொதுவான மருந்தாக உபயோகிக்கலாம்.

அளவு: 1 — 2 குளிகைகள் மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர் அல்லது வாத ரோகங்களுக்கேற்ற கஷாயத்தில் (ராசனாதி) உபயோகிக்கலாம்.

## (v) சூரணம் *Choorana*

1. அஸ்வகெந்த சூரணம் Ashwaganda Choorana

இது வாதரோகங்களில் உபயோகிக்கக் கூடியது. நரம்பு சம்பந்தப்பட்ட உளைவு, குத்து, பிடிப்பு போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். அழல்வாதம் போன்றவற்றிற்கும் (Neuritis) உபயோகிக்கலாம் சர்ம ரோகங்களிலும் உபயோகிக்கலாம்.

அளவு; மூன்று விரல் பிரமாணம். இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (500 mg – 1g)

அனுபானம்: தேன்.

## 2. பாஸ்கர லவணம் Baskara Lavanam

இதனை உணவுப் பாதையில் ஏற்படும் அதி அமிலத்தன்மை (Hyper Acidity) எரி குன்மம், எரிவு, ஆமாசய விரணம் (Gastric Ulcer) போன்ற வியாதிகளில் உபயோகிக்கலாம். இது அமிலத்தன்மை யைக் குறைக்கும். (Antacid) வேலையை செய்யும் தன்மையுள்ளது. இது ஒரு பசித்தீதூண்டி. மண்ணீரல் வீக்கம், ஜலோதரம், மூலரோ கம், (Sprue) நாட்பட்ட மலக்கட்டு ஆகியனவற்றிற்கும் உகந்தது.

அளவு: (500 mg — 1 g) மூன்று வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர் அல்லது பசுப்பால்

## 3. தாத்திரி சூறணம்Dhathri Choorana

இது மலக்கட்டை நீக்கி பசியைத் தூண்டக்கூடியது. இது இலகு மலகாரியாகவும் (Laxative) வேலை செய்யக் கூடியது சர்ம ரோகங்களிலும் விரேசனத்திற்கு உபயோகிக்கலாம் இது இரவு படுக்கைக்குப் போகும்போது உபயோகிக்கலாம்.

அளவு: 5 — 10 கிறும்ஸ்.

அனுபானம்: சர்க்கரை அல்லது பனங்கட்டி அல்லது சீனி கலந்து வாயில் போட்டு வெந்நீர் குடிக்கவும்.

## 4. தாடி மாஸ்தக சூரணம் Dadimashtaka Choorana

இது அதிசாரம், வயிற்றுளைவு போன்ற நிலைமைகளில் வயிற் றைக் கட்டக்கூடியது. இது Amoebiasis, Ulcerative Colitis வியா திகளின் பின் நாட்பட்ட நிலையில் உள்ள அடிக்கடி மலம் கழி வதை கட்டக்கூடியது. இதனை வேறு பஸ்பங்களுடனும் (சிங்கி, நாக) சேர்த்து உபயோகித்தால் குடலில் உள்ள நாட்பட்ட விரணம் மாறும்.

அளவு: மூன்று விரல் பிரமாணம். இருவேளை சாப்பாட்டிற் குப்பின். (500 mg — 1 g)

அனுபானம்: தேன்.

## 5. ஹிங்குவாஸ்ட்டக சூரணம் Hinguwastaka Choorana

இதனில் அகற்றுவாய்வகற்றி தன்மை (Carminative)உண்டு குன்ம ரோகங்களிலும் உபயோகிக்கலாம். இது பாண்டு ரோகங்க ளில் அதாவது உணவுப் பாதையில் ஏற்படும் அசாதாரண நிலை யால் ஏற்படும் பாண்டு ரோகங்களில் உபயோக்கிக்கலாம்.

அளவு: மூன்று விரல் பிரமாணம் இருவேளை சாப்பாட்டிற் குப்பின். (500 mg — 1g

அனுமானம்: தேன் அல்லது வெந்நீர்.



## 6. மானிபத்திரி சூரணம் Manibadra Choorana

இது சர்மரோகங்களில் உபயோகிக்க வல்லது. சிவகரந்தை சூரணத்திற்குப் பதிலாக உபயோகிக்கலாம். Scabies போன்ற உமிச்சிரங்கு வியாதிகளில் உபயோகிக்கலாம், அத்துடன் இலகு மலகாரியாகவும் (Laxative) வேலை செய்யக்கூடியது. இது மூல ரோகங்களிலும் உபயோகிக்கலாம்.

அளவு: மூன்று விரல் பிரமாணம் இருவேளை சாப்பாட்டிற் குப்பின். (500 mg — 1 g) மலம்இளக்ககூடுதலாகக் கொடுக்கவேண்டும்.

அனுபானம்: வெல்லம் அல்லது சீனி கலந்து வெந்நீருடன் சாப்பிடவும்.

## 7. புஷ்யானுக சூரணம் Pusyanuga Choorana

இது மாதர்களுக்கு ஏற்படும் மாதவிடாய் சம்பந்தப்பட்ட (Menorrhagia, Metrorrhagia) வியாதிகளுக்கும் வெள்ளை சாய் தல் வியாதிக்கும் (Leucorrhoea) நாட்பட்ட வயிற்றோட்டத்திற் கும் உபயோகிக்கலாம்

அளவு: (500 mg—1g) இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: தேன் அல்லது அரிசி கழுவிய நீர்.

## 8. சீதோபலாதிச் சூரணம் Seethopalathy Choorana

இது சுவாச ரோகங்களில் (Upper Respiratary Tract Infection) பொதுவாக உபயோகிக்கக்கூடியது. இருமல், தடிமன் காய்ச்சல் (Acute Coryza) நிலையில் சிறந்த பலனைக் கொடுக்கும். சுவாசப் பாதையை சாந்தப்படுத்தும் (Sedative) தன்மையுண்டு.

அளவு: மூன்று விரல் பிரமாணம் இருவேளை சாப்பாட்டி குப் பின், (500mg—1g)

அனுபானம்: தேன் அல்லது வெந்நீர்.

## 9. தாளிசாதி சூரணம் Thalisadi Choorana

இது சுவாச ரோகங்களில் முன் குறிப்பிட்ட சீதோபலாதி சூரணத்தைப் போல் உபயோகிக்கலாம். இதனில் கோழையகற்றி செய்கை அதனை விடக் கூடுதலாக உண்டு. (Expectorant) இதனை Acute Bronchitis, Influenza) போன்ற சுவாசப்பாதை தொற்று வியாதிகளில் துணை மருந்தாகவும் உபயோகிக்கலாம்.

அளவு. மூன்று விரல் பிரமாணம். இருவேளை சாப்பாட்டிற் குப் பின். (500 mg—1g)

அனுபானம்: தேன் அல்லது வெந்நீர் அல்லது இஞ்சிச்சாறு

### 10, திரிபலாதி சூரணம் Thiripaladi Choorana

இது சுவாச ரோகங்களில் உபயோகிக்கலாம். ஆனால் இதனில் பசித்தீதூண்டி குணமும் சேர்ந்து காணப்படுகின்றது. ஆகையால் சுவாச ரோகங்களில் ஏற்படுகின்ற உணவுப் பாதை ஒழுங்கீனங்களுக்கு இதனை உபயோகிக்கலாம்.

அளவு: மூன்று விரல் பிரமாணம் இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (500 mg – 1g)

அனுபானம்: தேன் அல்லது வெந்நீர்.

### 11. சுதர்ஸன சூரணம் Sudarshna Choorana

இது சகலவித சுரங்களுக்கும் உபயோகிக்கலாம். (விஷமசுரத்திற்கு விசேடம்) அத்துடன் தலைக்கிறுகிறுப்பு (Giddiness), தலைச்சுற்று (Vertigo) நாவரட்சி, இருமல போன்ற நிலைமைகளிலும் உபயோகிக்கலாம். அத்துடன் பாண்டு, காமாலை (Anaemia and Jaundice) வியாதியிலும் உபயோகிக்கலாம்.

அளவு: 500 mg – 1g மூன்றுவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர் அல்லது வேண்டிய கஷாயம்.

### 12. வர்ஜக்ஷார சூரணம் Vajrakshara Choorana

இது சிறுநீர் பெருக்கியாகவும் பசித்தீதூண்டியாகவும் வேலை செய்யும். வீக்கத்திற்கும் வயிற்றில் ஏற்படும் சூலைக்கும் (Abdominal Colic Pains) ஜலோதரத்திற்கும் (Ascites) உபயோகிக்கலாம்.

அளவு: 500 mg வரை இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர் அல்லது வேண்டிய கஷாயம்.

### 13. கட்பலாதி சூரணம் Katpaladi Choorana

இது தொண்டைக்கு மேற்பட்ட ரோகங்களில் நஸ்யமாக உபயோகிக்கப்படுகின்றது. இதனால் சிரசில் உள்ள நீர் வெளியேறும். இதனைப் பீனிச ரோகங்களில் உபயோகிக்கலாம்.

### 14. தஸாங்க லேப Dasanga Lepa

இது வீக்கம், நீர்கொப்புளங்கள் (Blisters) நாட்பட்ட விரணங்கள் (Ulcers) குஷ்ட ரோகங்கள், சர்மரோகங்கள் ஆகியவற்றில் வெளிப் பிரயோகமாக போடலாம்.

இதனை தேன் அல்லது வேண்டியவற்றில் கலந்து உபயோகிக்கலாம்.



### 15. கெந்தக இரசாயனம் Gandaka Rasayana Choorana.

இது சர்ம ரோகங்களுக்குச் சிறந்தது. சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற வியாதிகளுக்கு உபயோகிக்கலாம். இம்மருந்தை உபயோகிக்கும்போது விட்டு விட்டு சிறுநீர் பெருக்கி மருந்துகளை சேர்த்து உபயோகிக்க வேண்டும். அத்துடன் பசுப்பால், மற்றும் குளிர்மையான பானங்கள் கட்டாயம் அருந்த வேண்டும்

அளவு: மூன்று விரல் பிரமாணம் இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (500 mg – 1g)

அனுபானம்: பால் அல்லது நெய்.

## (vi) பஸ்பங்கள் (*Bhashma*)

### 1. லோக பஸ்பம் Logha Bhashma

இது பாண்டு வியாதியில் இரத்த விருத்திக்கு உபயோகிக்கலாம் அத்துடன் காமாலை, சோகை போன்ற நிலைமைகளில் உபயோகிக்கலாம்.

அளவு: 5 கிறெயின் இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (325 mg வரை)

அனுபானம்; தேன்.

### 2. மண்டூர பஸ்பம் Mandura Bhashma

இது பாண்டு, காமாலை, சோகை போன்ற இரத்த கெடுதியினால் உண்டாகும் வியாதிகளில் உபயோகிக்கலாம்.

அளவு: 5 கிறெயின் இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (325 mg வரை)

அனுபானம்: தேன்.

### 3. சுவர்ண மாக்ஷிய பஸ்பம் Swarnamakshika Bhashma. (பொன் நிமிளை)

இது வயிற்றோட்டம், சீதபேதி போன்ற வியாதிகளில் உபயோகிக்கலாம். குடலில் ஏற்படும் விரணங்களுக்கும் உபயோகிக்கலாம்.

அளவு: 5 கிறெயின் இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (325 mg வரை)

அனுபானம்: தேன்.

4. **தாம்பிர பஸ்பம்** Thambra Bhashma

இதற்கு உடம்பின் உள் உறுப்புக்களில் ஏற்படுகின்ற விரணங்களை ஆற்றும் தன்மையுள்ளது. பொதுவாக குஷ்டம், குன்மம், சூலை, வாதரோகம் ஆகியனவற்றில் உபயோகிக்கலாம் சுவாசாசயத்தில் ஏற்படுகின்ற க்ஷய (T. B) ரோகத்தினால் உண்டாகும் விரணம் (Caseation) ஆற்றும் தன்மை இதற்குண்டு. இதனை அளவுக்கு கூடுதலாக உபயோகித்தால் கல்லீரல் சேதமடையும்.

அளவு: 1 கிறெயின் வரை இருவேளை சாப்பாட்டிற்குப்பின். (65 mg)

அனுபானம்: தேன், நெய்.

5. **சங்கு பஸ்பம்** Sanku Bhashma

இது வயிற்றில் ஏற்படுகின்ற அமிலத் தன்மையைக் குறைக்கும் தன்மை வாய்ந்தது. அமிலத்தன்மை சம்பந்தமான சூலை, வயிற்றுவலி, குன்மம் பித்த வாய்வு ரோகங்களில் உபயோகிக்கலாம். ஆமாசயவிரணங்களையும் ஆற்றும் தன்மை வாய்ந்தது.

அளவு: 5 கிறெயின் இருவேளை சாப்பாட்டிற்குப் பின் (325 mg வரை)

அனுபானம்; பழச்சாறு அல்லது பனை வெல்லம் அல்லது இஞ்சிச் சாறு அல்லது மோர்.

பொதுவாக நெய் அல்லது பாலில் கொடுக்கலாம்.

6. **வங்கபஸ்பம்** Wanga Bhashma

இது சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் நாட்பட்ட வியாதிகளான வெள்ளை, சதையடைப்பு, கல்லடைப்பு முதலிய நோய்களை அகற்றும் தன்மை வாய்ந்தது.

அளவு: 5 கிறெயின் இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (325 mg வரை)

அனுபானம்: வெண்ணெய் அல்லது நெய் அல்லது பால் அல்லது சீனி.

## (vii) கல்கம் லேகியம் *Kalka and Leha*

1. **புத்தரராஜ கல்கம்** Buddharaja Kalka.

இதனை சுவாச ரோகங்களில் உபயோகிக்கலாம். ஆனால் குறிப்பாக ஈளை ரோகத்தில் (Bronchial Asthma) மகரந்த அனுபானத்தில் கொடுக்க உடனே நிவாரணம் கிடைக்கும்.



மகரந்த அனுபானம்: ஆடாதோடை இலைச்சாறு, இஞ்சிச்சாறு, தேன், புளித்தோடை அல்லது தேசிப்புளிசாறு.

அளவு: 250 mg வரை இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

2. **சியவனப்பிரகாச லேகியம்** Chavanaprakhasawa Leha.

இது தேகபுஷ்டியை உண்டுபண்ணக்கூடியது. அன்றியும் காசம், சுவாசம், ஷயம் முதலிய ரோகங்களிலும் உபயோகிக்கலாம். வீரிய விருத்தி செய்யும் தன்மையுள்ளது.

அளவு: இரு தேக்கரண்டி பிரமாணம் இரு வேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுமானம்: பசுப்பால்.

3. **தச துன் கல்க** Desadunkalkaya

இதனை சிறுவர்களுக்கு ஏற்படும் சுரத்திற்கும் வலிப்புகளுக்கும் உபயோகிக்கலாம். குருதியை சுத்திகரிப்பதற்கும் சிறுவர்களுக்கு உகந்த மருந்தாகும்.

அளவு: 50 mg—250 mg வரை இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுமானம்: வெந்நீர், சீனி.

4. **கங்காயண மோதக** Kankayana Modaka

இதனை மூல ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். உள் மூலம் வெளி மூலம் ஆகிய இரண்டுக்கும் நாட்பட்ட மலக்கட்டுக்கும் உபயோகிக்கலாம். இலகுவாக மலம் வெளியேறுவதும் குடலைக் குளிர்ச்சியடையவும் செய்கின்றது.

அளவு: 2 தேக்கரண்டி இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர் அல்லது பால்.

5. **குஷ்மாண்ட லேகியம் (நீற்றுப் பூசினி)** Kusmanda Leha.

இது உடம்பு குளிர்மைக்கு உபயோகிக்கும் மருந்து; சிறுநீர்ப் பாதையில் தொற்றுக் கிருமியால் ஏற்படும் வெப்பு நோய்க்கு சிறந்தது. வெள்ளை சாய்தல் (Leucorrhoea) வாய் அவியல், வயிற்று எரிவு போன்ற பித்த ரோகங்களிலும் சிறந்த பலனைக் கொடுக்கும்.

அளவு: 2 தேக்கரண்டி இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: பசுப்பால்

6. நவரத்ண கல்க Navaratna Kalka

இது உணவுப்பாதை ரோகங்களில் ஏற்படும் குமட்டல், வாந்தி, அஜீரணம், வயிரோட்டம், வயிற்றுப் பொருமல், சுரம் போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். அத்துடன் வாத ரோகங்களில் ஏற்படும் குத்துளைவு, வேதனை ஆகியவற்றிற்கும் உபயோகிக்கலாம்.

அளவு: ·25—1.25 கிரும்ஸ். இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (250mg—1¼g)

அனுபானம்: உணவப்பாதை ரோகங்களில் இஞ்சிச்சாறும் தேனும், வாத உளைவுகளில் உள்ளியுடன்.

7. சர்கராதி கல்க Sharkaradi Kalkaya

இது பாலர்களுக்கு உபயோகிக்கும் மருந்து. இது சிறுவர்களுக்கு ஏற்படும் சுரம், இருமல், சளிசுரம் (Bronchitis, Influenza) ஆகியனவற்றிற்கு உபயோகிக்கலாம் அத்துடன் சிறுநீர் பெருக்கியாகவும், இலகுமலகாரியாகவும் கோளையகற்றியாகவும் வேலை செய்யக்கூடியது.

அளவு: ·125—50 கிரும்ஸ். இருவேளை சாப்பாட்டிற்குப் பின். (50 mg—500 mg)

அனுபானம்: மல்லி அவித்த நீர் அல்லது தேவையான அனுபானம்.

8. வாசவ லேக Vasawa Leha.

இது நாட்பட்ட சுவாச ரோகங்களில் உபயோகிக்கலாம். நாட்பட்ட சுவாசப் பாதை தொற்று Chronic Bronchitis Bronchiectasis போன்ற ரோகங்களில் சிறந்த பலனைக் கொடுக்கும். (Pulmonary T. B) சுவாசாசய க்ஷய ரோகத்தின் பின் இதனை உபயோகித்து வந்தால் விகற்பங்கள் ஏற்படாமல் சுவாசாசயத்திற்குப் பலத்தைக் கொடுக்கும்

அளவு: 2 தேக்கரண்டி. இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர்.

9. வெள்ளை வெண்காய லேக Wellawengaya Leha

இது உணவுப் பாதையில் ஏற்படும் பசியின்மை, அஜீரணம், வயிற்று வேதனை, மலக்கட்டு போன்றவற்றிற்கு உபயோகிக்கலாம். குருதி அமுக்கம் உள்ளவர்களுக்கும் (Hypertension) ஆமாசய விரணம் (Gastric Ulcer) உள்ளவர்களுக்கும் உபயோகிக்கலாம்

அளவு: 2 தேக்கரண்டி இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர்.



10 ரோகனி காஷ் Rogani Kash

இது வீக்கம், சீழ் கட்டி (Absess) கட்டு (Boils) போன்ற தாபிதங்களுக்கு வெளிப் பிரயோகமாக உபயோகிக்கலாம்: இது கட்டுகளைப் பழுக்கவைத்து உடைப்பதுடன் வேதனாசாந்தினியாகவும் வேலை செய்கின்றது.

வெளிப் பிரயோகம் மட்டும்.

11. லாக்சாதி லேப Lakshadi Lepa

இது முறிவு நெரிவு நோ போன்ற நிலைமைகளில் வெளிப் பிரயோகமாக உபயோகிக்கலாம். தாபித நிலைகளில் (Inflammatory Conditions) சிறந்த பலன் அளிக்க வல்லது. உராய்வு (Bruises) கண்டல் (Contusions) போன்றனவற்றிற்கும் உபயோகிக்கலாம்.

இதனை தேனில் குழைத்து பூசி லேபமிடலாம். வெளிப்பிரயோகம் மட்டும்.

12 கண்டங்கத்தரி லேக Kandakari Leha

இதனை சுவாச ரோகங்களில் உபயோகிக்கலாம். மேற்குறிப்பிட்ட வாசவ லேகத்திற்குப் பதிலாக இதனை உபயோகிக்கலாம். இதனில் கோளையகற்றி (Expectorant) தன்மை அதிகம் இருக்கின்றது. இதனை Broncheatasis நோயில் உபயோகித்தால் ஏராளமான சளிகளையும் வெளியேற்றி நோயாளிக்கு இருமலைச் சாந்தப்படுத்தும் தன்மையையும் தர வல்லது இதனில் சுவாசக் குழாயை விரிக்கும் தன்மை (Broncho Dialator) உண்டு.

அளவு: 2 தேக்கரண்டி இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம்: வெந்நீர்.

## (viii) இரச (*Rasa*)

1. மகா சங்க வடி Mahasanka Wati

இது ஆமாசய விரணம், குடல் புண் (Peptic Ulcer) ஆகியனவற்றில் விரணத்தை ஆற்றக்கூடியதும் அதனால் ஏற்படும் கோளாறுகளையும் குணப்படுத்தக் கூடியது.

அளவு: 1—2 வில்லை. இருவேளை சாப்பாட்டிற்குப் பின்.

அனுபானம். பசுப்பால்.

2. மிருத்திஞ்சிய இரச Murthunjaya Rasa

இது சகலவிதமான சுரங்களுக்கும், குளிர்சுரங்களுக்கும் உகந்தது. அத்துடன் சுவாசாசய ரோகங்களில் ஏற்படும் சுரங்களில் சிறப்பாக செயலாற்றும் தன்மையுள்ளது மலேரியாபோன்ற சுரத்திற்கும் உபயோகிக்கலாம்.

அளவு: 2—4 மாத்திரைகள் இருவேளை சாப்பாட்டிற்குப்பின்
அனுபானம்: இஞ்சிச் சாறு அல்லது மல்லி அவித்தநீர் அல்லது வேண்டியகசாயம்.

### 3. திரிபுவன கீர்த்தி ரச Thribuwana Kirthi Rasa

இதுவும் முன்குறிப்பிட்ட மிறுத்திஞ்ய ரசவிற்கு பதிலாக உபயோகிக்கலாம். சகல சுரங்களுக்கும் வேண்டிய அனுபானத்தில் கொடுக்கலாம்:

அளவு: 2—4 மாத்திரைகள் இருவேளை சாப்பாட்டிற்குப் பின்,
அனுபானம்: இஞ்சி, தேன் அல்லது மல்லி அவித்த நீர்

### 4 இராமபாண ரச Ramabana Rasa

இதுவும் சகல சுரங்களுக்கும் உபயோகிக்க வல்லது. இது முன்குறிப்பிட்ட இரு சுர மாத்திரைகளுக்குப் பதிலாக உபயோகிக்க கூடியது.

அளவு: 2—4 மாத்திரைகள் இருவேளை சாப்பாட்டிற்குப் பின்:
அனுபானம்: வேண்டிய அனுபானம்; முன்னையதுபோல்

### 5. புனர்னவாதி மண்டூர Punarnawade Mandura

இதனை இரத்த சோகையால் ஏற்படும் வீக்கத்திற்கு உபயோகிக்கலாம். இதனில் இரத்த விருத்தி செய்யும் தன்மையும் சிறுநீர் பெருக்கி தன்மையும் இருப்பதால் மகோதரம் போன்ற வியாதிகளிலும் உபயோகிக்கவல்லது.

அளவு: 2—4 மாத்திரைகள்
அனுபானம்: வெந்நீர் அல்லது வேண்டிய அனுபானம்.

### 6. சுவாச குடோரி ரச Swasa Kootara Rasa

இது சுவாசாசய ரோகங்களிம் உபயோகிக்கலாம் சுவாசக் குழாய்களை விரிக்கும் தன்மையுள்ளமையால் நரம்புத் தூண்டல்களால் (Broncheal Spasm) ஏற்படுகின்ற ஈளை (Bronchial Asthma) நோயில் தகுந்த அனுபானத்தில் கொடுக்கலாம் இதற்கு கோளையகற்றி தன்மையும் உண்டு.

அளவு: 2—4 மாத்திரைகள்.
அனுபானம்: வெந்நீர் அல்லது தாளிசபத்திரி கஷாயம்.



## பகுதி III

## (i) ஆயுர்வேத முறைப்படி உபயோகிக்கப்படும் சில கஷாயங்கள்

கஷாயம் தயாரிக்கும் முறை:

பொதுவாக கஷாயத்தில் குறிப்பிடும் சரக்குகளின் அளவு குறிப்பிடப்படா விட்டால் சம எடை எனக் கொள்க. எட்டில் ஒன்றாக சுண்டக் காய்ச்சி வடித்து உபயோகிக்கலாம். தயாரிக்கும் கஷாயத்தை அன்றே உபயோகிப்பது நன்று. அடுத்தநாள் வைத்து உபயோகிப்பது உகந்ததல்ல.

### 1. ஏரண்டசப்தக கஷாயம் Eranda Sapthaka Quatha

| | |
|---|---|
| ஆமணக்கம் வேர் | புளித் தோடை |
| வில்வம் வேர் | பீளை சாறி |
| வட்டுக்கத்தரி வேர் | நெருஞ்சி |
| கண்டங்கத்தரி | |

இது பொதுவாக வாத ரோகங்களுக்கு உபயோகிக்கலாம். கிருத்தரிசி (Sciatica) நோயில் சிறந்த பலனைக் கொடுக்கவல்லது.

### 2. இராசனு சப்தக கஷாயம் Rasana Saptheka Ouatha

| | |
|---|---|
| சித்தரத்தை | சீர்தில், |
| சரக்கொன்றை | தேவதாரு |
| சாறணை | ஆமணக்கு |
| | நெருஞ்சில் |

இதவும் பொதுவாக வாத ரோகங்களில் உபயோகிக்கலாம் அத்துடன் சிறுநீர்ப்பாதை தொற்றுக்கும் உபயோகிக்கலாம்.

### 3. சாத்தாவாரி கோபகன்யா கஷாயம் Sathavariya Gopakanya

| | |
|---|---|
| சாத்தாவாரி | மஞ்சிஸ்ட்டி |
| தன்னாரி | முந்திரிகைப்பழம் |
| வெண்சந்தனம் | இருவேலி, |
| இலாமிச்சு | நிலப்பனங்கிழங்கு |
| அதிமதுரம் | அல்லிக் கிழங்கு |

இது உடம்பின் சகல மண்டலங்களையும் குளிர்மையடையச் செய்யும் குணம் உண்டு குறிப்பாக வெள்ளை சாய்தல் (Leucorrhoea) வியாதியில் சிறந்த பலனைக் கொடுக்கும்.

4. புஸ்கரமூலாதி கஷாயம் Puskaramoolathy

வெண்கோட்டம்
சுக்கு
சிறுதேக்கு
ஜடாமாஞ்சில்
அதிமதுரம்
கண்டங்கத்தரி
ஆடாதோடை
நாயுருவி

இது சுவாச ரோகங்களில் உபயோகிக்கக் கூடியது: குறிப்பாக (Bronchial Asthma) ஈளை ரோகத்தில் சிறந்த பலனை அளிக்கும்.

5. சிர வில்வாதி கஷாயம் Chira Bilwathiya

சிவகரந்தை வேர்
உள்ளி
சாறணை
கடுக்காய்
திற்பலி
இஞ்சி
இந்துப்பு

இது மூல ரோகங்களில் உபயோகிக்கலாம். இது மலமிளக்கியாகவும் வேலை செய்யும்.

6. புனர்நவாஷ்ரக கஷாயம் Punarnawastaga

சாறணை
வேம்பு
கடுகுரோகணி
சீந்தில்
பேய்புடல்
இஞ்சி
தேவதாரு
கடுக்காய்.

இது சிறுநீர்ப் பெருக்கியாக வேலை செய்யும் பாண்டுநோயில் (Anaemia) ஏற்படுகின்ற வீக்கத்திற்கு சிறந்த முறையில் வேலை செய்யக் கூடியது. இரத்தத்தையும் விருத்திசெய்யக்கூடியது.

7. பட்டோலை கடுக்காய் பீறு Pattola Katuka Beeru

திரிபலை
சீந்தில்
பேய்புடல்
கடுகுரோகணி
சாத்தாவாரி

இது நாட்பட்ட சர்ம ரோகங்களில் Eczema) சிறந்த பலனைக் கொடுக்கும். அத்துடன் Oesinophilia வைக் குறைக்க வல்லது.

8. பலா வில்வ சுண்டி கஷாயம் Bala Bilva Sunti

வில்வை
சிற்றுமட்டி
இஞ்சி

இது பாரிசவாதத்தில் பொதுவாக உபயோகிக்கும் கசாயம் குருதி அமுக்கத்தையும் சமப்படுத்தும்.



9. திருகடுக்காதிய கஷாயம் Thrikadukkathya Kasaya

இஞ்சி
மிளகு
திற்பலி
கடுக்காய்
தாண்டிக்காய்
நெல்லி
கொத்தமல்லி,
வசம்பு
கடுகுரோகிணி
வேம்பு
சீந்தில்
கோரை

இது பாரிசவாதத்திற்கும் குருதி அமுக்கத்திற்கும் உபயோகிக்கலாம். இது முன்னையதைவிட வீரியம் கூடியது.

10. திக்குல ஹிங்கு கஷாயம் Thikulu Hingu Kashaya

இஞ்சி
மிளகு
திற்பலி
கொத்தமல்லி
பெருங்காயம்

இது Bronchitis, Bronchial, Asthma வில் ஏற்படுகின்ற உணவுப்பாதை இலட்சணங்கள், வயிற்றுப் பொருமல், குமட்டல்போன்ற நிலைமைகளில் உபயோகிக்கலாம்.

11. ஷட்டங்கபாணி கஷாயம் Shadanga Panaya Kahsya

கோரைக்கிழங்கு
செஞ்சந்தனம்
வெட்டிவேர்
பற்படாகம்
இலாமிச்சு
சுக்கு

இது பித்த சுரத்திற்கும் (Jaundice போன்றவை) நாவரட்சிக்கும் சிறந்தது. இதனை நெருப்புக்காய்ச்சல் (Typhoid Fever) உள்ளவர்களுக்கு உபயோகிக்கலாம்.

12. கிருமி கஷாயம்

கிருமிசத்துரு
வாய்விடங்கம்
வேப்பங்கூர்
மாம்பிற்று
துவரம்பருப்பு
கறிவேம்பு கூர்
முருங்கைக்காய் தோல்
மாதுளம்வேர்

இவை வகைக்கு கழஞ்சு-3(15 கிராம்)
கராம்பு கழஞ்சு $\frac{1}{2}$ (3 கிராம்)

பெரியவர்களுக்கு (6 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு) ஈச்சங்குருத்து. ஆடு தீண்டாப்பாலை சேர்க்கலாம்.

13. செங்கண்மாரிக் குடிநீர்

சிற்றுமட்டி
விலவவேர்
சிறுபயறு,
மல்லி

சிறுநெருஞ்சில்வேர் சுக்கு
செந்தாமரைக் கிழங்கு நெற்பொரி
நற்சீரகம் வகைக்கு கழ. 4 (20 gm)

செவ்விளநீர் 3 படி (5 போத்தல்) சேர்த்து காலிபங்காக வற்ற வைத்து நேரம் 30—60 மிலி நாளொன்றுக்கு ஆறுமுறை கொடுக்கவும். இக்குடிநீருடன் சந்திராதி மாத்திரை, பூரணசந்திராதி மாத்திரை கொடுத்தல் விசேட பலன் தரும்.

## (ii) சில செய்கைகளுக்கான பிரதான மூலிகைகள்

1. Antipyretics சுரஹரகாரி (பொதுவானது)
   - பற்படாகம்
   - நிலவேம்பு
   - விஷ்ணுகிராந்தி
   - சித்தரத்தை
   - மல்லி
   - வேம்பு
   - பேய்ப்புடோல்
   - நன்னாரி
   - வெட்டிவேர்
   - கோரைக் கிழங்கு
   - மரமஞ்சள்
   - பெருமருந்து

2. Antimalarial மலேரியாச்சுரத்திற்கு (விஷமசுரம்)
   - நிலவேம்பு
   - வேம்பு
   - பெருமருந்து
   - விஷ்ணுகிராந்தி
   - ஏழிலம்பாலை
   - அதிவிடயம்

3. Anthelmentic குடற்புழுக் கொல்லி
   - பலாசு
   - ஆடுதீண்டாப்பாலை
   - சணல்
   - முருங்கை,
   - வாய்விடங்கம்
   - கிருமி சத்துரு
   - மிளகு
   - ஈச்சம் குருத்து
   - வல்லாரை
   - துவரபபருப்பு
   - நீற்றுப்பூசணி
   - குப்பைமேனி

4. Aphrodisiac இன்பம் பெருக்கி
   - அமுக்சரா
   - வெண்காயம்
   - மதனகாமப்பூ
   - எள்ளு
   - வெற்றிலை
   - வாதாம்பருப்பு

5. Astringent துவர்ப்பி
   - கோரை
   - வில்வம்
   - சாதிக்காய்
   - நாவல்
   - அத்தி
   - இத்தி
   - கருவேலம்
   - மாயாக்காய்



6. Carminative அகட்டு வாய்வகற்றி
   - சுக்கு
   - திற்பலி
   - மிளகு
   - கோரை
   - சீரகம்
   - அதிவிடயம்
   - உள்ளி
   - ஏலம்
   - ஓமம்
   - பெருங்காயம்.

7. Diuretic சிறுநீர் பெருக்கி
   - சிறுநெருஞ்சி
   - பீளைசாறி
   - நீர்முள்ளி
   - கீழ்க்காய்நெல்லி
   - சாறணை
   - சுரைக்காய்
   - வெள்ளரிக்காய்
   - நன்னாரி

8. Expectorant கபஹரகாரி
   - தூதுவளை
   - திற்பலி
   - ஆடாதோடை
   - இக்கிரி
   - துளசி
   - கற்கடகசிங்கி
   - கண்டங்கத்தரி
   - அதிமதுரம்
   - குப்பைமேனி
   - தும்பை

9. Anti Spasmodic Action in Respiratory Tract வறட்டு இருமலை சாந்தப்படுத்துபவை
   - கற்பூரவள்ளி
   - அதிமதுரம்
   - தாளிசபத்திரி

10. Antidyspnoeic சுவாச கஷ்டத்தை நீக்குபவை
    - மிளகு
    - நிர்விஷம்
    - பூலாங்கிழங்கு
    - புஷ்கரமூலம்
    - கோட்டம்
    - சிறுதேக்கு
    - கறிமஞ்சள்
    - கண்டங்கத்தரி

11. Antidysenteric சீதபேதியை குணப்படுத்துபவை
    - வெட்பாலை
    - இருவேலி
    - பொடுதலை
    - நாயுருவி
    - வில்வம்
    - மாதுளை

12. For Diarrhoea வயிற்றோட்டத்தைத் தடுப்பவை
    - கோரை
    - வெட்பாலை
    - இருவேலி
    - வில்வம்
    - மாதுளை
    - சாதிக்காய்
    - வெந்தயம்
    - சீரகம்
    - ஓமம்
    - மாயாக்காய்

13. For Haemorrholds மூலநோய்க்கு உபயோகிப்பவை

கருணைக்கிழங்கு
சிறுநாகம்பூ
கோகிலா
தாரைக்கிழங்கு
குமரி கத்தாளை
சூரத் தாமரை
சிவதை
வில்வம்பழம்

14. Anti Diabetic மதுமேகத்தில் உபயோகிக்ககூடியவை

பொன் ஆவரசு
பாவல்
வெந்தயம்
சிறுகுறிஞ்சா
சீந்தில்
நாவல்
கடல்ருஞ்சி
அத்தி
கறிமஞ்சல்
பட்டிப்பூமரம்

15. Purgative and Laxatives பேதியும் மலமிளக்கியும்

சிவதை.
நேர்வாளம்
சரக்கொன்றை
சூரத்தாமரை
நாக தந்தி
கடுக்காய்

16. Blood Purifiers and for Skin Disorders இரத்த சுத்திக்கும் சர்ம ரோகத்திற்கும் உபயோகிப் பவை.

கடுக்காய்
பூவரசு
பேய்ப்புடல்
கறிமஞ்சள்
சிவநார்வேம்பு
ஊசித் தகரை
ஆடாதோடை
தாண்டிக்காய்
நெல்லிக்காய்
சீந்தில்
மஞ்சிஷ்டி
காசுக்கட்டி
வண்டுகொல்லி
வேம்பு

17, Anti Pruritics நமைச்சலைக் குறைப்பவை

வேம்பு
புங்கு
நீர்பிரமி
வெண்சந்தணம்
வெட்டிவேர்
சரக்கொன்றை.
கோரை
வெட்பாலை
கையாந்தகரை

18. Healing of wounds விரணமாற்றி

புங்கு
சீதேவியார்
செங்கழுநீர்
சூரியகாந்தி



19. Cardio Tonic இருதய உரமாக்கி

மருது
ரோஜாப்பூ
சிற்றாமட்டி
மருள்
கோரை
வல்லாரை
வில்வம்
அம்மான் பச்சையரிசி
அல்லி
மாதுளை
கஸ்தூரி

20. Hypotensive குருதி அழுத்தத்தை குறைப்பவை.

அமல் பொரி (பாம்புக்களா)
உள்ளி
புன்னை
மருது
ஜடாமாஞ்சில்
தொட்டாற்சுருங்கி
குக்கில்,
பொற்றிலைக்கையாந்தகரை
பெருங்காயம்
சங்கங்குப்பி

21. For Renal Calculi சிறுநீர் கற்களுக்கு உபயோ கிப்பவை.

மாவிலங்கு
சிறுபீளை
சிறு நெருஞ்சி
நீர்முள்ளி
கொள்ளு
முள்ளங்கி
பேய்பீர்க்கு
சுரை
வெள்ளரிவித்து

22. Throat Infection தொண்டை அழற்சிக்கு

பேரரத்தை
வசம்பு
மிளகு
காசுக்கட்டி
கடுக்காய்
வெண் நொச்சி
அதிமதுரம்
அக்கராகாரம்

23. Anti Arthritic வாதரோகத்தில் உபயோகிப்பவை

அமுக்கிராய்
பறங்கிக்கிழங்கு
சித்தரத்தை
மாவிலங்கு
சுக்கு
நொச்சி
பெருங்காயம்
சேங்கொட்டை,
சிற்றாமட்டி
சிற்றாமணக்கு
முருங்கை
உள்ளி
சாறணை
தேவதாரு
சீரகம்

24. For Obesity ஸ்தூல தேகி உபயோகிக்கலாம்

நெல்லிக்காய்
கொள்ளு
ஊசித்தகரை
கடுக்காய்
கோரை
தாண்டிக்காய்
பேய்ப்புடோல்
வாய்விடங்கம்

25. For Tranouilizers and Sedatives அகற்றியும் உறக்கமுண்டாக்க உபயோ யோசனு கிக்கக் கூடியவை.

உள்ளி
வசம்பு
சாதிக்காய்
வல்லாரை
சங்கங்குப்பி
நொச்சி
தகரை
மஞ்சிஸ்டி

26. Anti Epileftic காக்கை வலிப்புக்கு உபயோகிக்கக் கூடியவை.

வசம்பு
உள்ளி
வாலுளுவை

27. For Cancer புற்று நோய்க்கு உபயோகிக்கக் கூடியவை.

சேங்கொட்டை
பட்டிப் பூ செடி



# மருத்துவ அளவைகள்

1 கிரேயின் = 65 மி.கி.
2 ,, = 130 ,,
4 ,, = 260 ,, = 1குன்றி
80 ,, = 5200 மி. கி. = 1 மஞ்சாடி
640 ,, = 41600 மி.கி. = 1களஞ்சு = 5 மி. லி
= 8 களஞ்சு = 1 பலம்
1 களஞ்சு = 20 மஞ்சாடி

1 படி = $2\frac{1}{2}$ இரு. = 40 அவு. = 32 பலம்
1 வீசை = 3 இரு. 2 அவு.
1 தோலா = $2\frac{1}{4}$ கள. = 1 ரூபா எடை
1 துரோணம் = 32 இரு. = 15·36 லிற்றர்
1 நாழி = 20 அவு. = 16 பலம்
1 ஆழாக்கு = $2\frac{1}{2}$ அவு. = 2 பலம்
1 போத்தல் = 24 அவு. = 19 $\frac{1}{5}$ பலம்

1 வராகன் = 4 கிராம்
$1\frac{1}{4}$ வராகன் = 1 களஞ்சு
5 வராகன் = 4 களஞ்சு

1 தோலா = 180 கிரெயின் = 11·7 கிராம் = $2\frac{1}{4}$ களஞ்சு
1 பணவெடை = 488 மி.கிராம்

| | | |
|---|---|---|
| பாசிப் பயறு பிரமாணம் | — 0½ இறேயின்ஸ் | — 33 மி. கி. |
| மிளகு அல்லது உழுந்து பிரமாணம் | —01 ,, | — 65 ,, |
| குன்றிப் பிரமாணம் | —02 ,, | — 130 ,, |
| தூதுவளம் பழப் பிரமாணம் | —04 ,, | — 260 ,, |
| வெருகடி | —10 ,, | — 650 ,, |

| fl. dr, டிராம் | fl. oz. அவுன்ஸ் | min. துளி |
|---|---|---|
| 1 | — | 60 |
| 2 | $\frac{1}{4}$ | 120 |
| 4 | $\frac{1}{2}$ | 240 |
| 6 | — | 360 |
| 8 | 1 | 480 |

| fl. dr. டிராம் | fl. oz. அவுன்ஸ் | ml மி. லி. | Litre. லிற்றர் |
|---|---|---|---|
| 8 | 1 | — | — |
| 16 | 2 | — | $\frac{1}{16}$ |
| 32 | 4 | 125 | $\frac{1}{8}$ |
| 48 | 6 | — | — |
| 64 | 8 | 250 | $\frac{1}{4}$ |

ஒரு தேக்கரண்டி [Tea Spoonful] = 4ml மி. லி. = 1 dr.
ஒரு மேசைக் கரண்டி[Table Spoonful] = 15ml, மி.லி= ½ oz
(உச்சிக் கரண்டியையும் மேசைக் கரண்டியையும் சமனாகக் கருதலாம்.)



# விடமுறிவுக்கு நம்நாட்டு மருத்துவம்

## நஞ்சு முறிவு மூலிகை
## ANTI - DOTE HERBS

1. அவுரி Indigofera Tinctoria
2. நஞ்சறுப்பான் கொடி Tylophora Asthmatica
3. சிறியாள் நங்கை Polygala Grinersis
4. குப்பை மேனி Acalypha Indica
5. அறுகம் புல் Cynodon Dactylon
6. மூக்கிறட்டைக் கீரை Boerhaavia Diffusa

### மட்டைத்தேள், தேனீ குளவி, போன்றவை கொட்டினால் கடிவாயில் போடுவது

I சுண்ணாம்பு பூசுதல் அல்லது
II நாயுருவிக் கொழுந்து அரைத்துப் பூசுதல் அல்லது
III வெங்காயம் அரைத்துப் பூசுதல் அல்லது
IV உருளைக்கிழங்கு அரைத்துப் பூசுதல் அல்லது
V மண்ணெண்ணை பூசுதல்

### புலிமுகச் சிலந்தி கடித்தால் கடிவாயில் போடுவது

(1) உப்பு, புளி மிளகு, ஏலம் இவற்றை ஒன்று சேர்த்து அரைத்து பூசிவிடுக. அல்லது
(2) பலாக்காய்ப் பால் அல்லது
(3) பழப்புளி, சுண்ணும்பு ஒன்று சேர்த்துப் பூசுக

உட்கொள்வது....

(1) தென்னை மட்டைச் சாறு அல்லது
(2) ஈச்சமிலைச் சாறு அல்லது
(3) துத்தி இலைச் சாறு

### தேள் கொட்டினுல் கடிவாயில் போடுவது

(1) வெண்காயத்தை அரைத்து போடுதல் அல்லது
(2) பழம்புளி, சுண்ணும்புடன் சேர்த்து போடுதல் அல்லது
(3) தும்பை இலை, துளசி இலை சேர்த்து அரைத்து போடுதல்

உட்கொள்வது....

தேங்காய்பாலில் அவுரிவேரை அரைத்து உண்ணுதல்

## தொகுப்பிற்கு உதவிய நூல்களிற் சில


1. Sri Lanka Ayurvedic Drugs Corporation Price List — 1981, Navinna, Maharagma.

2. Indigenous Ayurvedic Herbs Used in Sri Lanka By Dr. Srikantha Arunachalam, Research Officer, Bandaranaike Memorial Ayurvedic Research Institute. Navinna, Sri Lanka. 1975.

3. ஆயுள்வேத ஔடத சங்கிரகம் சித்த ஔடத செய்முறை
   ஆயுர்வேத இலாகா, கொழும்பு.
   ஆக்கியோர்: Dr. S. M. பொன்னையா, L. I. M. (Madras)
   Dr.. I. சபாபதிப்பிள்ளை L. I. M. (Madras)

4. சுதேச வைத்திய ரத்தினம் மூன்றாவது பதிப்பு
   Dr S. சந்திரசேகர், கும்பகோணம்.

5. சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம் (மூலவர்க்கம்)
   Materia Medica (Vegetable Kingdom)
   ஆசிரியர்: சி. கண்ணுச்சாமிப்பிள்ளை, சென்னை, 1979

6. ஆஸவாரிஷ்ட கல்பம் என்னும் மதுவர்க்கம்
   ஆசிரியர்: வைத்தியபூபதி எஸ். கிருஷ்ணராவ்
   ஆயுர்வேத ஸித்தாச்சிரமம், சென்னை, 1929.

7. ஸஹஸ்ர ஸித்தயோகம் (இரண்டாம் பாகம்)
   ஆசிரியர்: வைத்தியபூபதி எஸ். கிருஷ்ணராவ், சென்னை, 1933.
   (இவ்வாசிரியரைப் பதிப்பாசிரியர் எனக் கருதுவோருமுண்டு)

ஸ்ரீ காந்தா அச்சக வீதி, ராஜா தியேட்டர் அருகாமை,
யாழ்ப்பாணம்.